# தமிழ்ச் சொல்லமைபு

வே. வேங்கடராஜுலு ரெட்டியார்
எழுதியது

பேராசிரியர்,
தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்
முன்னுரை உடையது

ரத்னம் பிராஞ்சு பிரஸ்ஸில்
பதிப்பிக்கப்பட்டது

பதிப்புரிமை] 1956 [விலை ரூ. 1-4-0

# அர்ப்பணம்

★

என் தமையனார் க. வே. லக்ஷ்மண ரெட்டியாரவர்கள் புதல்வனும் எல்லா நற்குணங்கட்கும் இருப்பிடமானவனும் இளமைமுதல் என்னோடு உறைந்து எனக்கு உறுதுணையாயிருந்தவனும் ஆகிய ஸ்ரீ, ல. ஸ்ரீநிவாஸராகவன், B.A., ஞாபகார்த்தமாக இந்நூலை வெளியிடுகின்றேன்.

வே. வேங்கடராஜுலு

# முன்னுரை

"இலக்கணக் கவிஞர் சொல்லின்பந் தேடுவர்" என்பது ஆன்றோர்மொழி. சொற்களின் அமைதி-யும் சிலவற்றின் வரலாறும் அறிவது சிறந்த இன்பம் பயப்பதே. அவ்வின்பம் காப்பியச் சுவை-யினுஞ் சிறந்ததென்பது அறிஞர்சிலர்கருத்து.

சொற்களின் உருமாறுதலையும் பொருள்மாறு-தலையும் அறிதல் அறிவிற்கு விருந்தாய் அமையும். ஆயின், சொற்களின் இயல்பான வடிவத்தை அறிதல் எளிதன்று.

சொற்களுட் பொருட்காரணந் தெரிபவற்றைக் காரணப்பெயர் என்றும் பொருட்காரணந் தெரி-யாதவற்றை இடுகுறிப்பெயர் என்றும் இலக்கண-வாசிரியர் வழங்குவர். ஆயின், பெயர்களெல்லாம் முதனிலைகளினின் றமைந்தனவே யாகும். அவற்-றுட் பலவற்றின் முதனிலை விளக்கமாகத் தெரிய-வில்லை. பெயர்களின் முதல்நிலைகளை ஆய்ந்தறி-தலிலுள்ள விருப்பத்தால் பல யாண்டுகளாக இப்பணியில் ஈடுபட்டுள்ளேன்; யான் அறிந்த சொற்களுட் சிலவற்றைத் "தமிழ்ப்பொழி"லில் எழுதிவந்தேன்; அதன்பின் சென்னைப் பல்கலைக் கழகப் பத்திரிகையிலும் (Annals of Oriental Research) சிலவற்றை எழுதினேன்.

பலப்பல சொற்களை ஆராய்ந்ததில் சொல்லமை-பில் யான் அறிந்த நியதிகள் இரண்டு. அவையாவன:

1. சொற்களில் இயல்பாக மெய்யெழுத்துக்கள் இரட்டித்திருத்தல் இல்லை. அவ்வாறிருப்பின்

விகுதிப்புணர்ச்சியினால் ஆகியிருத்தல் வேண்டும்; அல்லது அச்சொல் மரூஉவாயிருத்தல் வேண்டும். கண்ணன், கள்ளன் என்பவற்றில் விகுதிப்புணர்ச்சியினால் மெய்யெழுத்து இரட்டியது; குள்ளன் என்பது மரூஉச்சொல்.

2. மெல்லெழுத்துக்கள் இன வல்லெழுத்துக்களோடு இயல்பாய் இயைந்திருத்தல் இல்லை. அதாவது—வங்கு, பஞ்சு, நண்டு, குந்து, நம்பு, என்று என்னுஞ் சொற்களில் உள்ள மெல்லெழுத்துக்கள் இயல்பானவையல்ல; திரிபுபெற்றனவாகும்.

தமிழ்மொழியில் பன்னூறாண்டுகட்கு முன்னரே பிராகிருதத்திலிருந்தும் வடமொழியிலிருந்தும் நூற்றுக்கணக்கான சொற்கள் வந்து சேர்ந்துள்ளன. அவற்றுட் பல தமிழ்ச்சொற்களேபோல வழக்கிலும் பயின்றுள்ளன. ஆகலின், இப்பொழுது அவற்றை வேறுதெரிதல் எளிதன்று. இதற்கு ஒரு நியதியை ஏற்படுத்திக் கொள்ளுதல் அமைதி. இத்திறத்தில், புகழுடம்பொடு விளங்கும் உயர் திரு. கா. நமச்சிவாய முதலியாரவர்கள்கருத்து மேற்கொள்ளுதற்குத் தக்கது. அஃதாவது—இருக்குவேதம் ஆரியர் திராவிடரோடு கலத்தற்கு முன்னரே அமைந்ததாகலின் அதிற்காணுஞ் சொற்களை ஆரியச்சொல் என்றே கொள்ளுதல் வேண்டும்; அவற்றைத் தமிழ்ச்சொல் என்று கொள்ளுதல் தகாது. அதற்குப் பிற்பட்ட மறைகளிலும் பிறவற்றிலும் தமிழ்ச்சொற்கள் சேர்ந்திருக்கலாம்.

தண் என்பதனையும் நீர் என்பதனையும், பிளவு படாமல், தண்நீர் என்று ஒலித்தல் இயலாது; தண்ணீர் என்று ஒலித்தலே கூடும். பிளவுபடக் கூறின், தண் நீர் என்று ஒலிக்கலாம். வடமொழியில் (ஷட் என்பதன் திரிபாகிய) ஷண் என்பதனோடு [1]நவதி என்பதனைச் சேர்த்து ஒலிக்குமிடத்து, நவதி என்பதன் நகாரம் ணகாரமாய்த் திரிந்து ஷண்ணவதி என்று ஒலிப்பது ஈண்டு ஒப்பிடத்தக்கது. அடித்தான், பிடித்தான் என்பவற்றில் தகரமெய்க்கு மேல் இருக்கும் இகரம் இடையண்ணத்திற் பிறப்பதாகலின், பல்லினடியிற் பிறக்குந் தகாரத்தை, தான் பிறக்கின்ற இடையண்ணத்திற் பிறக்குஞ் சகரமாக ஒலிக்கச் செய்கின்றது. அடிச்சான் என்பதில் இகாரமும் தகாரமும் ஒருங்கொலித்தற்கு இயலாதனவல்ல; நாவின் இயல்பானே தகாரம் திரிந்தது. இவ்வாறே வலைஞர், அரிஞர் என்னுஞ் சொற்களிலும் நகாரம் ஞகாரமாய்த் திரிந்து ஒலிக்கின்றது.

தமிழில் வல்லெழுத்துக்கள் முற்காலத்தில் எல்லாவிடத்தும் வல்லோசையவாய் ஒலிக்கப்பட்டனவாகும். அஃதாவது, க ச ட த ப க்கள் வடமொழியில் உள்ள க ச ட த ப க்கள் ஒலித்தல்போன்று ஒலிக்கப்பட்டன. றகரம், டகரவொலியினை ஒட்டிய ஒலியாய் ஒலிக்கப்பட்டது. பின்னர்,

1. நவதி என்பது ணவதி என்று திரிந்தபின், ஷட் என்பது ஷண் என்று திரியும் என்று இலக்கணம் கூறும்.

அவற்றைப் பல ஏதுக்களான் ஆராய்ந்து துணிதல் வேண்டும் என்பது.

இதனை ஆராய்ச்சியாளர் பலர் மேற்கொள்கின்றனர். ஆயின், இருக்குவேதத்திலுள்ள சொற்களையும் தமிழ்ச்சொல் என்று கொண்டு எழுதுபவர்களும், வடசொல் என்று பலரும் ஒப்புக்கொண்ட சொற்களையும் தமிழ்ச்சொல்லாகக் காட்டுபவர்களும் சிலர் உளர். இவ்வாறே திராவிட மொழிச்சொற்களையும் வடமொழிச்சொல் என்று சொல்பவரும் ஒரு சிலர் இருக்கின்றனர்.

தமிழ்மொழிமூலமாகவே முதல்நிலை கண்டறியலாகுஞ் சொல்லைத் தமிழ்ச்சொல்லாகக் கொண்டு இப் புத்தகத்தில் எழுதியுள்ளேன். உதாரணமாக— வட்டம் என்னுஞ் சொல் வ்ருத்தம் என்னும் வடசொல்லினின்று பிராகிருதத்தின் வழியே வந்த சொல் என்று உரையாசிரியர்கள் எழுதியிருக்கின்றனர். ஆயினும் வளை, வணர், வள்ளம், வட்டம், வட்டில் முதலிய பலசொற்களும் வள் என்னும் முதல்நிலையினின்று அமைதல் கூடுமாகலின், வட்டம் என்பதனைத் தமிழ்ச்சொல்லாகக் கொண்டு எழுதியுள்ளேன். இவ்வாறு ஒரு சில உள. இவற்றை முடிந்த முடிபாகக் கொள்ளுதல் கூடாது.

தமிழ்ச்சொற்களின் அமைதிகளை ஆராய்தற்கு முதற்படியாக 'மெய்யெழுத்துக்களின் திரிபு' என்னுந் தலைப்பில் ஒரு கட்டுரையைச் சென்னைப் பல்கலைக் கழகப் பத்திரிகையில் வெளியிட்டேன். அதன் பின், 'தமிழ்ச்சொல்லமைபு' என்னும் பொருள் பற்றி

எழுதிய கட்டுரையின் முற்பகுதி அப்பத்திரிகையில் வெளிவந்தது. இப்பொழுது, அக் கட்டுரை முழு-வதையும் புத்தக வடிவில் வெளியிடக் கருதி, பல்-கலைக் கழகப் பத்திரிகையில் வெளியிட்ட முற்பகுதி-யையும் 'மெய்யெழுத்துக்களின் திரிபு' என்னுங் கட்டுரையையும் இதில் சேர்த்துக்கொள்ள அனுமதி யளிக்குமாறு பல்கலைக்கழகத்தை வேண்டிக்கொண்-டேன். அவ்வாறு அனுமதி நல்கிய பல்கலைக்கழகத்-ததிகாரிகள்பால் நன்றியறிதலுடையேன்.

'மெய்யெழுத்துக்களின் திரிபு' என்னுங் கட்-டுரையின் முன்னுரை சொல்லாராய்ச்சிக்குப் பெரிது வேண்டப்படுவதாகலின் அதனை இப்புத்தகத்தில் முதற்கண் அமைத்துள்ளேன்; அக்கட்டுரையில் வெளியிட்ட சொற்களுட் சிலவற்றைமட்டும் இப்புத்த-கத்தில் ஆங்காங்குச் சேர்த்திருக்கின்றேன்.

என் வேண்டுகோளை ஏற்று, இப்புத்தகத்திற்கு அணிந்துரை எழுதியருளிய சென்னை, மாகாணக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், பன்மொழிப் புலவர், உயர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், M. A., B. L., M. O. L., அவர்கட்கு நன்றி செலுத்துங் கடப்பாடுடையேன்.

இப் புத்தகத்தைத் தமிழறிஞர் ஏற்று எனக்கு ஊக்கம் அளிப்பராயின் இன்னும் பல சொற்களைப்-பற்றி எழுதி வெளியிடுதல் கூடும்.

1—12—'56
மயிலை, மதராஸ்.

அறிஞருக்கு அடியேன்,
**வே. வேங்கடராஜுலு.**

க ச ட த பக்கள் சொற்களில் இரட்டித்துவருமிடம் ஒழிய, மற்றையவிடங்களில் தம் பழைய ஒலியை இழந்தன; பெரும்பாலும் வடமொழியில் வருக்க-வெழுத்துக்களுள் மூன்றாமெழுத்தின் ஒலியைப் பெறலாயின. றகாரம் இரட்டிக்குமிடத்திற்றானும் தனது இயல்பான ஓசையை உடையதாயில்லை. மெல்-லெழுத்துக்களுள் நகாரம் நன்கு ஒலித்தல் இல்லை. இடையெழுத்துக்களுள் ரகர ழகரங்கள் பெரும்-பாலும் சரியாயொலித்தல் இல்லை. இத்தகைய ஒலி-வேறுபாட்டாலும் சில திரிபு நேர்ந்துள்ளன.

இடையெழுத்துக்களெல்லாம் பல்வேறு வகை-யாகத் திரிந்தும் கெட்டும் வழக்கில் வழங்குகின்றன; செய்யுளுள்ளும் பல காணகின்றன. அவற்றை நோக்குவோம்:

| | |
|---|---|
| [1] நெருநல் | [2] நென்னல் |
| [3] பெருமான் | [4] பெம்மான் |
| [5] ஒருத்தன் | [6] ஒத்தன் |

---

1. குறள் 336.

2. திருப்பாவை 16. நென்னல் என்பது தெலுங்கில் நின்ன என்றும், கன்னடத்தில் நின்னெ என்றும், மலையாளத்-தில் இன்னலெ என்றும் வழங்குகின்றது.

3. பெருங்கதை. 42. 11.

4. திருஞான. தேவா. 1. 127 : 1.

5. திருவாச. 29. 2.

6. கலித். 62.

நெருநல் முதலியவை நென்னல் முதலியனவாக நேரே திரியா; நெருநல் என்பது நெர்நல் என்ருகி, பின்னர், நெந்நல்—நென்னல் என்ருகியிருத்தல் வேண்டும் என்று தோன்றும். ஆயின், பழங்-கன்னடமும் தெலுங்கும் நோக்கின், நெர்நல் என்-பதுபோன்றவையே பழைய என்பதும், தமிழில் உகரம் சேர்ந்துளது என்பதும் புலனுகும். நெர்நல், பெர்மான், ஓர்தன் என்பவற்றில் வேற்றுநிலைமெய்-மயக்கமாயிருந்த ரகாரம் தன் முன்னின்ற மெய்-யாகத் திரிந்துளது என்பது நன்கறியப்படும். பழங்-கன்னடத்தில் வேற்றுநிலைமெய்மயக்காயிருந்த ரகார ழகாரங்கள் தம் முன்னிற்கும் எழுத்தாகத் திரிந்து புதுக்கன்னடத்தில் வழங்குகின்றன. உதா-ரணமாக—

| பழங்கன்னடம் | புதுக்கன்னடம் | பொருள் |
|---|---|---|
| எர்து | எத்து | எருது |
| உர்து | உத்து | உழுந்து |
| பிர்து | பித்து | விருந்து |
| மர்து | மத்து | மருந்து |
| அழ்கெ | அக்கெ | அழுகை |
| கழ்தெ | கத்தெ | கழுதை |
| பழ்தி | பத்தி (ஹத்தி) | பருத்தி |
| பொழ்து | பொத்து (ஹொத்து) | பொழுது |

இவ்வாறே ரகர ழகரங்களெல்லாம் தம் முன்னிற்-கும் எழுத்தாகத் திரிந்து புதுக்கன்னடத்தில்

வழங்குகின்றன. புதுக்கன்னடத்தில், தனிச்சொல்லில் ரகர ழகரங்கள் வேற்றுநிலைமெய்ம்மயக்கத்தனவாயிருத்தல் இல்லை.

மேற்காட்டியவற்றில் பழங்கன்னடச்சொற்கள் புதுக்கன்னடத்தில் திரிந்து வழங்குதல்போன்று, வடசொற்கள் பாகதத்தில் திரிந்து வழங்குகின்றன. உதாரணமாக—

| வடசொற்கள் | பாகதச்சொற்கள் |
|---|---|
| அர்க: | [1] அக்கோ |
| ஆர்த: | [2] அத்தோ |
| கர்ணபூரம் | [3] கண்ணஊரம் |
| கர்தரீ | [4] கத்தரீ |
| கார்யம் | [5] கய்யே |
| கீர்தி: | [6] கித்தீ |
| நிர்மாதி | [7] ணிம்மாணஇ |
| நிவர்தக: | [8] ணிவத்தஓ |
| தீர்கம் | [9] திக்கம் |
| தூர்த: | [10] துத்தோ |

---

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | ப்ராக்ருதப்ரகாஶிகை | 3. 3 | 6. | ,, | 3.24 |
| 2. | ,, | 3.24 | 7. | ,, | 3.36 |
| 3. | ,, | 4. 1 | 8. | ,, | 3.24 |
| 4. | ,, | 3.24 | 9. | ,, | 3.58 |
| 5. | ,, | 2. 7 | 10. | ,, | 3.24 |

| | |
|---|---|
| மூர்தி : | [11]முத்தீ |
| வர்ண : | [12]வண்ணே |
| வர்தமாநம் | [13]வத்தமாணம் |
| வார்தா | [14]வத்தா |
| வர்ம | [15]வம்மோ |

என்பன காண்க. வடசொற்களில் வேற்றுநிலை-மெய்மயக்கா யிருந்த ரகாரம் தன் முன்னின்ற எழுத்தாய்த் திரிந்து பாகதமாய் வழங்குகின்றது. இவ்வாறே லகாரமும் தன் முன்னின்ற எழுத்தாய்த் திரிதல் உண்டு.

| | |
|---|---|
| உல்கா | [16]உக்கா |

இனி, இடையெழுத்துக்களேயன்றிப் பிற வெழுத்துக்களும் இவ்வாறு திரிந்து வழங்கும். இவற்றையெல்லாம் ஈண்டு எடுத்துக்காட்டியதன் கருத்து, தமிழில் இங்கனம் திரிந்தன உள; அவ்வாறு திரிதல் இயல்பே என்பதனை வலியுறுத்தற்-பொருட்டே எனக் கொள்க. இதனைச் சொல்லமை-யில் அறியலாகும்.

---

11. ப்ராக்ருதப்ரகாஶிகை 3.24
12. „ 4.15
13. „ 3.24
14. „ 3.24
15. „ 4.18
16. „ 3. 3

# உள்ளுறை

## முதற்பிரிவு


பக்கம்

மொழித்தோற்றம் ... 1

திராவிடமொழிகளுள் ஒன்றற்கு ஒன்று வேண்டற்பாலது ... 6

திராவிடமொழி பலவாகிய காரணம் ... 10

திராவிடமொழியின் பழைய நியதி ... 11

திராவிடமொழிகளில் ஒலிமாற்ற நியதி ... 14

உயிரெழுத்துக்களின் திரிபு ... 19

மெய்யெழுத்துக்களின் திரிபு ... 20


## இரண்டாம் பிரிவு


1. பகுதிகள் .... 32

2. பெயர்கள் .... 43

விகுதிகள்

அம், அர், அல், அன், இ, இல், ஐ .... 61

பிற்சேர்பு

மரூஉச்சொல் ... 81

சென்னை, பிரஸிடென்ஸி [redacted]

தமிழ்ப் பேராசிரியர்,

உயர்திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரவர்கள்,

M.A.B.L., M.O.L.,

எழுதிய

# அணிந்துரை

★

திராவிடமொழி ஆராய்ச்சி அறிஞர் கால்ட்வெல் காலத்திற்குப் பின் மிக முன்னேறி உள்ளது என்று கூறுவதற்கு இல்லை. திராவிட மொழிகளை எல்லாம் அறிந்து கொள்ளும் முயற்சி எத்தனையோ காரணங்களால் தடைப்படுகின்றது. இந்த முயற்சியில் முனைவோரே இந்த ஆராய்ச்சியில் ஈடுபடுதல் கூடும். அப்படி ஈடுபட்டு முன்னேறிச் சென்ற சிலரில் திரு. வேங்கடராஜுலு ரெட்டியார் தலை சிறந்தவர் எனலாம். கற்பனை உலகில் இவ்வாராய்ச்சியை நடத்தாது, கற்பனையைக் கவியுலகத்தோடு விட்டுவிட்டு, விஞ்ஞான நெறியே செல்லும் இரண்டொருவராய் நிற்கும் இனத்தைச் சேர்ந்தவர் இப்பெரியார். இவரும், மொழியின் பொதுவான வரலாற்றில் புகாது இருந்தால் நலமாக இருந்திருக்கும். சீன மொழியைப்பற்றி இவர் கூறுவது அறிஞர் கால்ட்வெல் காலத்து நம்பிக்கை. இப்போது அதனை நம்புவார் இல்லை. ஆனால், திராவிடச் சொற்களை எடுத்தாராயும்போது விஞ்ஞான வழியே

சென்று கால்ட்வெல் அடைந்த இடத்தையும் கடந்து சென்று புதிய எல்லைகளைத் திரு. ரெட்டியார் காட்டுகிறார். கு, சு, டு, து, பு, று முதலிய சொல்லாக்க நிலை உருபுகளை அறிஞர் கால்ட்வெல் காட்டியது உண்மையே. ஆனால் அவற்றைப் பிரித்த பின் அடிச் சொல்லாய் எஞ்சுவதனை எல்லா இடத்தும் அறிஞர் ஒப்பும் வகையில் அவர் கூறவில்லை. திரு. ரெட்டியார் பெரும்பான்மையும் அனைவரும் ஒப்பும் வகையிலேயே அவற்றை விளக்குகின்றார். இங்கும் டு, று என்பன புணர்ச்சி நிலையில் வருவன என்ற உண்மை மேலும் செல்ல வழி காட்டுவதாகும். என்னுடைய ஆராய்ச்சி மாணவர் ஒருவர் தட்டித் தடுமாறி இந்த உண்மையைக் கண்ட பின் வழி தெரியாது திகைக்க வேண்டியதாயிற்று. இந்த நூல் முன்னரே வந்திருந்தால் அத்தகையோருக்கு எவ்வளவோ உதவியாய் இருக்கும். இந்த வகையில் நூல் பல இவர் எழுத வேண்டும் என எத்தனையோ ஆண்டு மன்றாடியவரில் நானும் ஒருவன். ஆதலின், 'தமிழ்ச் சொல்லமைபு' என்னும் இந்த நூலைக் காண்பதில் எவ்வளவோ பெரு மகிழ்ச்சி எனக்கு உண்டு. மேலும் பல நூல்களைத் திரு. ரெட்டியார் எழுதித் தமிழ்த் தொண்டு புரிவாராக.

தெ. பொ. மீனாட்சிசுந்தரம்

நோக்குவோம்: ஒள்ளியன் என்பதற்கு ஒளியுடை-யவன் என்று கூறும் பொருள் சிலவிடங்களில் அமைவதாயில்லை.

[9]'உடைப்பெருஞ் செல்வத் துயர்ந்த பெருமை
அடக்கமில் உள்ளத்த னாகி—நடக்கையில்
ஒள்ளிய னல்லான்மேல் வைத்தல் குரங்கின்கைக்
கொள்ளி கொடுத்து விடல்'

என்னுஞ் செய்யுளில், ஒள்ளியன் என்பதற்கு ஒளி-யுடையவன் என்னும் பொருள் அமைவுடையதா யிலதன்றே! ஆகலின், அமைவுடைப் பொருள் யாது என்று நோக்கவேண்டுவதாயுளது. ஒள்ளியன் என்-பது கன்னடத்தில் நல்லவன் என்னும் பொருளில் வழங்குகின்றது. அப்பொருளே மேலைச்செய்யுளில் அமைவுடையதாகும். ஒள்ளியன் அல்லான்—நல்லவ-னல்லாதவன்; தீயவன் என்னும் பொருள் சிறப்பது காண்க.

[10]'வெள்ளிலை வேற்க ணாளை
சீவகன் வீணை வென்றான்
ஒள்ளியன் என்று மாந்தர்
உவாக்கடல் மெலிய வார்ப்ப'

என்னுமிடத்து, ஒள்ளியன் என்பதற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் 'நல்லன்' என்று பொருளெழுதி, 'ஒள்ளியன்-திசைச்சொல்' என்று விளக்கியிருப்பது காண்க. இனி,

9. பழமொழி, 179.
10. சீவக, 741.

[11]'வேயமைக் கண்ணிடை புரைஇ'

என்னுமிடத்து, அமை என்பதற்கு மூங்கில் என்று கூறும் பொருள் சிறப்புடையதாயில்லை; வேய் என்னுஞ் சொல்லே மூங்கிலைக் குறிக்கு மன்றே! ஆதலின், ஈண்டு அமை என்பதன் அமைதிப்பொருளை நோக்குதல் வேண்டும். மலையாள [12]லீலாதிலக நூலில்,

'ஆடமைத் தோளி கூடலு மணங்கே'

என்னும் அடியை எடுத்துக்காட்டி, 'அமை—மூங்கின் முளை' என்று எழுதியுள்ளார். மூங்கின்முளை கழையாய் (நேர்கோல்) நேரே வளர்ந்து பசியதாய், உருட்சியதாய், மெல்லியதாய், கண்ணுக்கினியதாய், இருக்கும். இதனை [13]'மோந்தன்' என்று சோழநாட்டில் வழங்குவர். இதுவே மகளிர்தோட்கு ஒப்புடையதாகும். மேற்காட்டிய 'வேயமை' என்னுமிடத்து, வேயின் அமை — மூங்கில்முளை என்று பொருள் அமைவுறுதல் அறிக.

பனி என்பது ஒரு நோய்க்கும் பெயர் என்பது,

[14]'பனியென வருஉங் கால வேற்றுமைக்
கத்தும் இன்னுஞ் சாரியை யாகும்'

என்னுஞ் சூத்திரத்தின் உரையில், 'பனி என்று

11. அகம். 152.

12. லீலா. சில்பம் 7.

13. பி. தியாகராஜ பிள்ளையவர்கள், எம். ஏ., தெரிவித்தார்கள்.

14. தொல். எழுத். 241.

சொல்லவருகின்ற—நோயன்றி—காலத்தை உணர-நின்ற வேற்றுமைமுடிபுடைய பெயர்க்கு' என்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் எழுதியிருப்பதனால் தெரிகின்றது. அஃது இன்ன நோய் என்று தமிழில் அறியுமாறில்லை. மலையாளத்தில், கடுங் குளிர்காய்ச்சலுக்குப் பனி என்று வழங்குகின்றது. அதனால் நச்சினார்க்கினியருரைப்பொருள் புலனாகின்றது.

இனி, ஊசல் என்னுஞ் சொல்லை நோக்குவோம்: இதன் பகுதி இன்னதென்பது விளங்கவில்லை. இச்சொல், தெலுங்கில் ஊயல, உய்யல என்றும், கன்னடத்தில் உய்யல் என்றும் வழங்குகின்றது. திராவிடமொழியில் ஒரேசொல் குறில்முதலதாயும் நெடில்முதலதாயும் வழங்குதல் உளதாகலின் இச்-சொல்லும் உய்யல, ஊயல என்று இரண்டு வடிவத்திலும் வழங்குகின்றது. இதனை நோக்கின், ஊசல் என்பது ஊயல் என்பதன் திரிபு என எளிதிற் புலனாகும். நேயம் என்பது நேசம் என்றும், கயம் என்பது கசம் என்றும் தமிழில் வழங்குதல் அறிதற்-பாலது. ஊயல் என்பது உய்யல் என்பதன் நெடிய வடிவம். உய்யல் என்பது உய் என்னும் பகுதி-யினின் றமைந்தது. இனி ஊய் என்னும் நெடில்-வடிவத்தினோடு கு—சேர்ந்து ஊய்கு=ஊக்கு என்-றமைந்த பகுதியும் தமிழில் ஆட்சி பெற்றுளது.

'ஐய சிறிதென்னை [15]யூக்கி எனக்கூறத்
தையால் நன்றென் றவனூக்க'

என்பது காண்க.

15. குறிஞ்சிக்கலி, 1.

இப் பகுதி தெலுங்கில் 'ஊ‹கூ' என்று வழங்குகின்றது.

இனி, முதன்முதல் வழங்கியதொருமொழி பல்வேறு மொழிகளாயது எப்படி என்று நோக்குவோம்:

பண்டைக்காலத்தில் நம் நாட்டில் மக்கள் இயற்கையோ டியைந்த வாழ்க்கையினை திராவிடமொழி உடையரா யிருந்தனராகலின், பலவாகிய காரணம் அவர்கள் அவ்வவ்விடங்களில் நிலையாகத் தங்கி வாழ்ந்தனர். அன்றியும், இக்காலத்திற்போன்று நெடுந்தொலைவிற்கும் விரைவிற் செல்லத்தக்க போக்குவரவுச்சாதனங்கள் இல்லாததனால், மக்கள் பிறநாடுகட்குச் செல்லுதலின்றித் தாம் தங்கிய நிலத்திலேயே நிலையாகக் குடியிருப்பாராயினர். ஆகலின், அவ்வந் நாட்டின் தட்பவெப்பங்களினாலும் உணவுப்பொருள் முதலியவற்றினாலும் நாளடைவில் ஒருநாட்டினரினின்று மற்றொருநாட்டினர் வேறுபடுவாராயினர். அவ் வேறுபாட்டானே, பலநாட்டினரும் ஒருங்குவாழும் இக்காலத்திலும் தெலுங்கர் கருநடர் மலையாளத்தவர் ஆகியவர்களைப் பெரும்பாலும் வேறு தெரிந்துகொள்ள இயல்கின்றது. இங்கனம் உடலில் வேறுபாடு அமைந்திருப்பதுபோலவே, குரலிலும் வேறுபாடு நேர்ந்துளது. இஃது அனைவரும் அறிந்ததே. இக் குரல்வேறுபாட்டால் சிலவெழுத்துக்களின்

ஒலி வேறுபடும். [16]உதாரணமாக—ஒன்று என்பது தமிழ்மக்கள்வழக்கில் ஒண்ணு எனவும், மலையாளத்தில் ஒன்னு எனவும், கன்னடத்தில் ஒந்து எனவும், தெலுங்கில் ஒண்டு எனவும் வழங்குதலை நோக்குக. ‘ஒரு மொழிக்குத் தேசபேதம் அனுசரித்துக் காலக்கிரமத்தில் உச்சாரணபேதம் வருதல்நிமித்தம் அதனுடைய விகுதியின் திறத்தில் ஒவ்வொரு தேசத்திலும் உச்சாரணத்திற்குச் சிறிது சிறிது மாற்றம் வந்துளது’ என்றும், [17]‘திராவிடதேசங்கள் வேறுவேறு அரசர்களின் ஆட்சியின்கீழ்ப்பட்டுப் பல ராஜ்யங்களாகப் பிரிந்தபின்னரே அந்த மூலபாஷையும் பல கிளைகளாய்ப் பிரிந்தது என்று ஊஹிக்கலாம்’ என்றும் ஆற்றூர், ஸ்ரீகிருஷ்ணபிஷாரடியார் எழுதியிருப்பவை அறிதற்பாலன.

**திராவிடமொழியின் பழைய நியதி**

பழைய மூலமொழி பிரியாது ஒன்றாயிருந்த காலத்தில் அதில் அமைந்திருந்த நியதிகள் அது பலமொழியாய்ப் பிரிந்த காலத்தில் தவறி வேறுபட்டன. ஒவ்வொரு நாட்டிலும் பெருவழக்காயிருந்த நியதி நிலைபெற, மற்றவை நாளடைவில் இறந்தொழிந்தனவாகும். இவ்வுண்மையைக் கீழ்வரும் உதாரணங்களால் உணரலாம்.

திராவிடமொழியில் ஒருமையைக் குறிக்க னகரமும் பன்மையைக் குறிக்க மகரமும் அமைந்திருந்-

16. ஸாஹித்ய சரிதம் பக். 10.
17. ,, பக். 18.

தன என்பது அனைவரும் அறிந்ததே. இந் நியதி-யைப் பழைய தன்மை, முன்னிலை, படர்க்கைப் பெயர்களிற் காணலாகும்.

| | ஒருமை | பன்மை |
|---|---|---|
| தன்மை | யான் | யாம் |
| முன்னிலை | நீன் | நீம் |
| படர்க்கை | தான் | தாம் |

என்பன காண்க. இந் நியதி வினைமுற்றுமுதலிய-வற்றிலும் காணப்படும். தெலுங்குமொழியில் தன்மையொருமைவினைமுற்றில் னகரமும், பன்மை-வினைமுற்றில் மகரமும் அமைந்துள்ளன.

தன்மையொருமை — நேனு வத்துன்
தன்மைப்பன்மை — மேமு வத்தும்

என்பன காண்க. தமிழில் இவ் வினையில் பன்மைக்-கண் மகரம் உளது; ஒருமைக்கண் னகரம் இல்லை.

தன்மையொருமை — யான் வருது
தன்மைப்பன்மை — யாம் வருதும்

மகரம் இல்லாவிடின் ஒருமை என அறியப்படுமாக-லின், னகரத்தில் ஊற்றங் கொண்டிலர் என்னலாம்.

இனி, செய்யும் என்னும் முற்றை நோக்கு-வோம்: தமிழில் படர்க்கைக்கண் பலர்பால் ஒழிந்த ஏனைநாற்பாலிலும் செய்யும் என்னும் முற்று வழங்குகின்றது. ஆயின், தெலுங்கில் இந் நாற்-பாலிலும் செய்புன் என்னும் முற்றே வழங்குகின்றது.

| | தமிழ் | தெலுங்கு |
|---|---|---|
| ஆண் | அவன் வரும் | வாடு வச்சுன் |
| பெண் | அவள் வரும் | ஆமெ(அதி)வச்சுன் |
| ஒன்றன்பால் | அது வரும் | அதி வச்சுன் |
| பலவின்பால் | அவை வரும் | அவி வச்சுன் |

என்பன காண்க. இவற்றை ஆழ்ந்து நோக்கின், மூலமொழியில் ஒருமைக்கண் செய்யுன் என்பதுவும், பன்மைக்கண் செய்யும் என்பதுவும் அமைந்திருந்தனவாகும் என்பதும், அவற்றுள் ஒவ்வொன்று ஒவ்வொரு மொழியில் நிலைத்துளது என்பதும் புலனாகுமன்றே! இனி, அஃறிணையொருமைவினைமுற்றுக்களை நோக்குவோம் :

| தமிழ் | தெலுங்கு |
|---|---|
| அது வந்தது | அதி வச்சினதி |
| இது வந்தது | இதி வச்சினதி |
| உது வந்தது | ——— |

| மலையாளம் | பழங்கன்னடம் |
|---|---|
| அது வந்நிது | அது பந்துது |
| இது வந்நிது | இது பந்துது |
| ——— | உது பந்துது |

என்று வழங்கும். அது இது உது என்னும் மூன்று சுட்டுக்களுள் யாதொன்று எழுவாயா யிருப்பினும், பயனிலைவினைக்கண் *தமிழில் அது என்பதும், தெலுங்கில் அதி என்பதும், மலையாளத்தில் இது என்பதும், கன்னடத்தில் உது என்பதும் சேர்ந்துள்ளன. ஆராய்ந்து நோக்கின்,

*வந்துது என்பதுபோல 'உது' வழக்கில் உளது.

அது வந்தது
இது வந்திது
உது வந்துது

என்றிருப்பதுவே முறையாகும் என்பது புலனாகும். ஆகலின், மூலமொழியில் இவ்வாறே முறைப்படி அமைந்திருந்திருக்கும் எனவும், பின்னர்த் தமிழிலும் தெலுங்கிலும் அகரச்சுட்டோடுகூடிய அது அதி என்பனவும், மலையாளத்தில் இகரச்சுட்டோடுகூடிய இது என்பதுவும், கன்னடத்தில் உகரச்சுட்டோடுகூடிய உது என்பதுவும் பயிற்சிமிகுதியினால் நிலைபெறலாயின எனவும் கொள்ளுதல் கூடும். இவ்வாறே இன்னுஞ் சில உள.

திராவிடமொழிகளில் ஒலிமாற்ற நியதி

இனி, ஈண்டு, ஒவ்வொரு மொழியிலும் ஒலிகள் எவ்வாறு திரிந்துள்ளன என்று சிறிது நோக்குவோம்:

## I. தமிழும் தெலுங்கும்

தமிழ்ச் சொற்களில் உள்ள ழகாரம் தெலுங்கில் டகாரமாகவும் சிறுபான்மை ரகாரமாகவும் திரியும்; ஒரோவழி னகாரம் ஆகும்.

| தமிழ் | தெலுங்கு |
|---|---|
| ஏழு | ஏடு |
| கூழு | கூடு |
| கோழி | கோடி |
| நீழல் | நீட |
| ஊழியம் | ஊடிகமு |
| கழை. | கட |

| | |
|---|---|
| கீழ் | கிர்ந்த (க்ரிந்த) |
| முழுகு | முனுகு |

ணகாரம் னகாரமாகும்.

| | |
|---|---|
| நாணம் | நான |
| கண் | கன்னு |
| மண் | மன்னு |
| வெண்ணெய் | வென்னெ |

ளகாரம் லகாரம் ஆகும்.

| | |
|---|---|
| குளன் | கொலன் |
| தேள் | தேலு |
| முள்ளு | முல்லு |

'ற்ற' ஒலி 'ட்ட' ஆகும்; ஒரோவழி 'ற' ஒலியும் 'ட்ட' ஆகும்.

| | |
|---|---|
| பற்று | பட்டு |
| சுற்றம் | சுட்டமு |
| புற்று | புட்ட |
| உறி | உட்டி |

'ன்ற' ஒலி 'ண்ட' ஆகும்.

| | |
|---|---|
| ஒன்று | ஒண்டு |
| குன்று | கொண்ட |
| மூன்று | மூ(ண்)டு |

ஐகாரவீறு அகரவீறா யிருக்கும்.

| | |
|---|---|
| தலை | தல |
| மலை | மல |
| பகை | பக |

## II. தமிழும் கன்னடமும்

யகரம் கன்னடத்தில் ஸகரம் ஆகும்.

| | |
|---|---|
| பெயர் | பெஸர், ஹெஸரு |
| நாயிறு | நேஸர் |

பகரம் ஹகரம் ஆகும்.

| | |
|---|---|
| பல் | ஹல், ஹல்லு |
| பால் | ஹாலு |
| புலி | ஹுலி |
| போகு | ஹோகு |
| பெரிது | ஹிரிது |

வகரம் பகரம் ஆகும்.

| | |
|---|---|
| வேம்பு | பேவு |
| வா | பா |

'ன்ற' ஒலி 'ந்த' என்றாகும்.

| | |
|---|---|
| ஒன்று | ஒந்து |
| பன்றி | பந்தி, ஹந்தி |
| பொன்று | பொந்து, ஹொந்து |

'ற்ற' ஒலி 'த்த' ஆகும்.

| | |
|---|---|
| புற்று | புத்து |
| பற்று | பத்து |
| மற்று | மத்து |

இறுதி ஐகாரம் எகாரம் ஆகும்.

| | |
|---|---|
| தலை | தலெ |
| மனை | மனெ |
| புகை | ஹொகெ |

முதலில் உள்ள எகரம் பெரும்பாலும் இகரம் ஆகும்.

| | |
|---|---|
| எறி | இறி |
| எலி | இலி |
| தெளி | திளி |
| செவி | சிவி |

முதலில் உள்ள உகரம் பெரும்பாலும் ஒகரம் ஆகும்.

| | |
|---|---|
| உடல் | ஒடல் |
| உடைமை | ஒடெமெ |
| புகை | புகெ, ஹொகெ |

ஒகரம் உகரமாயிருத்தலும் உண்டு.

| | |
|---|---|
| சொரி | சுரி |
| கொறி(செம்மறியாடு) | குறி |

## III. தமிழும் மலையாளமும்

'ன்ற' ஒலி 'ன்ன' என்று வழங்கும்.

| | |
|---|---|
| ஒன்று | ஒன்னு |
| குன்று | குன்னு |
| அன்று | அன்னு |

'ந்த' ஒலியும் 'ன்ன' (ந்ந) ஆகும்.

| | |
|---|---|
| மருந்து | மருந்நு |
| விருந்து | விருந்நு |
| சந்தனம் | சந்நநம் |

'ங்க' ஒலி 'ங்ங' ஆகும்.

| | |
|---|---|
| மாங்காய் | மாங்ஙா |
| நீங்கள் | நிங்ஙள் |

| | |
|---|---|
| குரங்கு | குரங்நு |
| மங்கலம் | மங்ஙலம் |

'ஞ்ச' ஒலி 'ஞ்ஞ' என்றாகும்.

| | |
|---|---|
| மஞ்சு | மஞ்ஞு |
| கஞ்சி | கஞ்ஞி |

'ந்த' என்னும் ஒலியும் 'ஞ்ச' என்றாகிப் பின் 'ஞ்ஞ' என்றாகும்.

| | | |
|---|---|---|
| அறிந்து | அறிஞ்சு | அறிஞ்ஞு |
| தேய்ந்து | தேய்ஞ்சு | தேஞ்ஞு |

'த்த' ஒலி 'ச்ச' என்றாகும்.

| | |
|---|---|
| அடித்து | அடிச்சு |
| குடித்து | குடிச்சு |

ஐகாரம் அகரம் ஆகும்.

| | |
|---|---|
| மலை | மல |
| தலை | தல |
| வாழை | வாழ |

இவ்வாறு ஒவ்வொருமொழியிலும் சிலசில திரிபுகள் நியதியா யமைந்துள்ளன. மேற்காட்டியவற்றுட் சிலதிரிபுகள் தமிழில் இக்காலத்துவழக்கில் உள்ளன. இவை நிற்க.

இனி, வேறுசில திரிபுகள் பலமொழிகளில் ஒற்றுமையாகக் காண்கின்றன. அவற்றுள் முக்கியமானவற்றை ஈண்டு நோக்குவோம்:

## I. உயிரெழுத்துக்களின் திரிபு

### அ ஆ, எ ஏக்கள் தம்முள் விரவும்

| தமிழ் | தெலுங்கு | கன்னடம் | மலையாளம் |
|---|---|---|---|
| அறி(கு) | எறுகு | அறி | அறி |
| என் | அன் | என் | என் |
| ஆள் (வினை) | ஏல் | ஆள் | ஆள் |
| நால் | — | நேல் | ஞாலு(க) |
| நாயிறு / ஞாயிறு | — | நேஸறு | ஞாயறு |

### இ ஈ, எ ஏக்கள் விரவும்

| | | | |
|---|---|---|---|
| எலி | எலுக | இலி | எலி |
| திரை | தெர | தெரெ | திர |
| திற | தெறசு | தெறெ | திற |
| சிறை | செற | செறெ | சிற |
| விலை | வெல | பெலெ | வில |

### உ ஊ, ஒ ஓ விரவும்

| | | | |
|---|---|---|---|
| உறை | ஒற | ஒறெ | உற |
| மூளை | மொலக | மொளெ | மூள |
| துவர் | தொகரு | தொவர் | துவர் |
| முதல் | மொதலு | மொதல் | முதல் |
| முறை | மொற | மொறெ | முற |

**சொல்லின் இடையிலும் ஒலி வேறுபடுதல் உண்டு.**

## II. மெய்யெழுத்துக்களின் திரிபு

தமிழில் மொழிமுதலிலுள்ள ககரம், தெலுங்கு கன்னடங்களில் க (g) ஆகும்; சகரம் ஜ ஆகும்; தகரம் த (d) ஆகும்; பகரம் ப (b) ஆகும்.

மொழிமுதலில் உள்ள உயிர்மெய்யில் மெய் கெடும். தமிழில் வளை, மூன்று இவை முறையே அளை, உன்னு என்றும் வழங்குகின்றன. தமிழில் உள்ள நீந்து, நாரி என்பவை தெலுங்கில் முறையே ஈது, ஆரி என்று வழங்குதலும், தெலுங்கில் நீருல்லி, பனுப்பு என்பவை, தமிழில் ஈருள்ளி, அனுப்பு என்று வழங்குதலும் அறிதற்பாலன.

மொழிமுதலில் உள்ள உயிரெழுத்து ஒரோ-வழிக் கெடுதலும் உண்டு. (உ-ம்) இழிகு - டிகு (தெலுங்கு).

இரண்டு குறில்கள் ஒரு நெடில் ஆகும். (உ-ம்) பகல் - பால்; துவற்றல் - தூற்றல்; அகன்றோர் - ஆன்றோர்.

| தமிழ் | தெலுங்கு |
|---|---|
| அவர் | வாரு |

மொழிமுதலில் உள்ள இரண்டுஉயிர்கள் மாறி-நின்று குணசந்திபோன்று ஓர்எழுத்தாய் வரு-கின்றன.

| தமிழ் | தெலுங்கு |
|---|---|
| இலது | லேது |
| இரண்டு | ரெண்டு |
| இரா | ரே(யி) |
| உரல் | ரோலு |

தமிழில் உனக்கு என்பது நோக்கு என்று பார்ப்பனர்வழக்கில் வழங்குவது இத்தகையதே. மரன், விரல் என்பவை தெலுங்கில் ம்ரான், வ்ரேல் என்று வழங்குதலும் இம்முறையின் அமைந்ததாகும்.

மொழியின் இடையில் நிற்கும் இடையினமெய்கள் தம் முன் நிற்கும் வல்லெழுத்து ஆகும்.

| தமிழ் | பழங்கன்னடம் | புதுக்கன்னடம் | தெலுங்கு |
|---|---|---|---|
| கழுதை | கழ்தெ | கத்தெ | — |
| பொழுது | பொழ்து | ஹொத்து | பொர்து<br>பொத்து |
| எருது | எர்து | எத்து | எத்து |
| திருத்து | திர்து | தித்து | தித்து |

மொழிமுதல் ககரம் சகரம் ஆகும்.

| க | த | தெ | ம |
|---|---|---|---|
| கீள் | கீள் | சீல்(சு) | — |
| கீரெ | கீரை | கூற | சீர |
| கீ(வு) | சீ | சீமு | — |
| கெத்தல் | சிதல் | செதலு | சிதல் |
| கிவி | செவி | செவி | செவி |
| கில(வு) | சில | — | சில |

இவ்வாறு வழங்குவன பல. இவற்றில் சகரம் ககரம் ஆயிற்று என்னலாகாதோ எனின், பொருந்தாது. என்னை யெனின், இச்சொற்களில் ககரத்தின்மேல் இ, ஈ, எ என்னும் உயிர்கள் ஊர்ந்து நிற்றலின், அவற்றின் சார்பினல் அவைபிறக்குமிடமாகிய இடையண்ணத்தில் ககரம் ஒலித்தலின், ககரம் சகரமாயிற்று.

திராவிடமொழிகளில் ஒரேசொல் குறில்முதலதாயும், நெடில்முதலதாயும் இருக்கும்.

தமிழ் :

| | |
|---|---|
| பொழுது | போழ்து |
| நிழல் | நீழல் |
| தொழுவம் | தோழம் = (தொழு) |
| கொவ்வை | கோவை |
| விழு<br>விழை } | வீழ் |
| அழு | ஆழ் ([18] ஆழல்—அழாதே) |
| இழு | ஈர் |
| எழு | ஏர் ([19] ஏர்க—எழுக) |
| [20] வழுத்து | வாழ்த்து |

18. 'ஆழல் வாழி தோழி.' (அகம். 85.)

19. 'தாமலர்க்கண் ஏர்க துயில்.' (வெண்பாமாலை, பாடாண். 39.)

20. 'வழுத்தினள் தும்மினே னாக' (குறள், 1317) என்னுமிடத்தில், வழுத்துதல் என்பது வாழ்த்துதற்பொருளதாதல் அறிக.

தெலுங்கு :

| | |
|---|---|
| நெய்யமு | நேயமு |
| உய்யல | ஊயல |

| த. | தெ. |
|---|---|
| வனை | வானு |
| நனை | நானு |
| கழுதை | காடிதெ |

இனி, சொல்லின் பொருளை அறியத் தொடங்குமுன், அது திராவிடமொழிச்சொல்தானா என்று ஆராய்ந்து அறிந்துகொள்ள வேண்டும். அவ்வாறின்றி, வடசொல் உருதுச்சொல் முதலியவற்றையும் தமிழ்ச்சொல்லாகக் கொண்டு சொற்பொருள் கூறின், அது பிறர் எள்ளி நகைத்தற்கு இடனாகும். திராவிடச்சொற்கள்சிலவற்றிற்கு வடசொல்லை மூலமாகக் கற்பித்து வடமொழியாளர் ஒருவர் கூறிய சொற்பொருளைக் குமாரிலபட்டர் தமது [21] **நூலில்** நகையாடியுரைத்திருப்பது ஈண்டு அறிதற்பாலது. அது பின்வருமாறு :

"திராவிடம் முதலிய மொழிகளில் உள்ள மெய்யீற்றுச் சொற்களில், வடமொழியாளர் தம் மொழிக்கு இயைய, உயிரீறு, பெண்பால்விகுதி முதலியவற்றைக் கற்பித்து அர்த்தத்தைச் சொல்கின்றனர். அன்னம் என்னும் பொருளையுடைய சோர் (சோறு) என்பதில் 'சோர' என்னுஞ் சொல்-

21. தந்த்ரவார்த்திகம், அத். 1 : பாதம் 3.

லின் பொருளைக் கற்பிக்கின்றனர். வழி என்னும் பொருளையுடைய அதர் என்பதில் 'அதர' என்னுஞ் சொல்லின் பொருளைக் கற்பிக்கின்றனர்; கடக்க முடியாததனால் அதர என்று ஆயிற்று என்பர். அவ்வாறே, சர்ப்பம் என்னும் பொருள் தரும் 'பாப்' (பாம்பு) என்னும் பகரவீற்றை அகரவீறாக்கி, "பாப" என்னுஞ் சொல்லே இது என்கின்றனர். மால் என்னுஞ் சொல்லை மாலா என்னும் பெண்பாற்சொல்லாக்கிப் பொருள் கற்பிக்கின்றனர். வயர் (வயிறு) என்னுஞ் சொல் வைர என்னுஞ் சொல்லின் பரியாயம் என்பர். இவ்வாறு திராவிடம் முதலிய மொழிகளில் இத்தகைய சொந்தக்கற்பனை செய்வதுபோல, பாரஸீகம், பர்ப்பரம், யவனம், ரௌமகம் முதலிய மொழிகளில் எவ்வெவ்வாறு விகற்பித்துப் பொருள் சொல்வார்களோ, அறிய இயலவில்லை."

மலையாள லீலாதிலகநூலின் ஆசிரியர் இன்னுஞ்சிலசொற்களை இவ்வாறு எடுத்துக்காட்டி இழிவுதோன்றக் கூறியுள்ளார்.

இக்கருத்தினை நாம் பொன்னேபோல் போற்றல்வேண்டும். சூரியன், சந்திரன் முதலிய வடசொற்களைத் தமிழாகக்கொண்டு பொருள்கூறுதல் மேற்காட்டியதை ஒக்கும்.

சொற்களின் பொருளை ஆராயுமிடத்து, இலக்கணவிதிக்கு மாறான அமைதிகள் காணப்படுகின்றன. உதாரணமாக, லகரமெய் தன்முன் தகரம் வரும்வழி றகரமாய்த் திரியும் என்றும், ஆண்டு அத்

தகரமும் றகரமாய்த் திரியும் என்றும் இலக்கண-நூல் கூறும். இவ்வாறே ளகரமெய் தகரம் வரும்-வழி டகரமாகும்; அவ்வாறு தகரம் வரும்வழி ழகர-மெய் திரிதலில்லை. ஆயின், சொற்களை நோக்கு-மிடத்து, தகரம் வரும்வழி லகரமேபோன்று ளகர-ழகரங்களும் றகரமாய்த் திரிந்திருத்தலைக் காண-லாகும்.

(உ - ம்) தேறல் — தெள் + தல்
தெற்றென — தெள் + து + என
முற்றும் — முழ் + து + உம் (முழுதும்)
சூறைவளி — சூழ் + து + ஐ + வளி (சூறுவளி).[22]

இனி, உலகவழக்கில் இயல்பான வடிவில் வழங்-குஞ் சொற்கள் செய்யுள்வழக்கில் மருவி வழங்கு-கின்றன.

| | | |
|---|---|---|
| (உ - ம்) | குளிர்த்தி | குளிர்ச்சி |
| | வளர்த்தி | வளர்ச்சி |
| | உயர்த்தி | உயர்ச்சி |

ஒரே பகுதி பலவிகுதிகளை அடைதல் உண்டு. அவ்வாறு விகுதி வேறுபடும்பொழுது, சொல்லின் பொருளும் வேறுபடும். கொள், நட, இரு என்னும் பகுதிகளை எடுத்துக்கொள்வோம்.

22. 'சூறுவளியே சுழன்றெழு காற்றே' என்பது திவாகரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| (1) கொள் | + | இ | = | கொள்ளி |
| ,, | + | ஐ | = | கொள்ளை |
| ,, | + | கை | = | கொள்கை (கு + ஐ) |
| ,, | + | பு | = | கொட்பு (சுழற்சி) |
| (2) நட | + | தை | = | நடத்தை (து + ஐ) |
| ,, | + | பு | = | நடப்பு |
| ,, | + | ஐ | = | நடை (நூல்நடை முதலியன) |
| (3) இரு | + | பு | = | இருப்பு |
| ,, | + | கை | = | [23] இருக்கை (கு + ஐ) |

இனி, ஒரு பகுதியே மேலும் மேலும் விகுதி- பெற்றுப் பகுதியாய் நிற்றல் உண்டு. ஆண்டும் இவ்வாறே பொருள் வேறுபடும்.

| | | | |
|---|---|---|---|
| நில் | | | (நீ நில்) |
| நிறு | = | நில் + து | (பொருளை நிறு) |
| நிறுத்து | = | நிறு + து | (வண்டியை நிறுத்து) |
| அள் | = | | (செறிதல்) |
| அடு | = | அள் + து | (சேர்ந்திருத்தல்) |
| அடுக்கு | = | அடு + கு | (ஒன்றன்மேல் ஒன்று சேர்ந்திருத்தல்) |

சொற்களோடு கு, சு, து, பு இவ்விகுதிகள் பொருள் வேறுபாடின்றிச் சேர்ந்து வருகின்றன.

| | | |
|---|---|---|
| கு : | ஆர் | ஆர்க்கு |
| | பீர் | பீர்க்கு |

23. 'இருக்கை யெழலும்' நாலடி. 143.

| | | |
|---|---|---|
| சு : | முடி | முடிச்சு |
| | முழை | [24]முழைஞ்சு |
| து : | இருள் | இருட்டு (இருள் + து) |
| | கால் | காற்று (கால் + து) |
| | [25]எல் | என்று (எல் + து) |
| பு : | உடல் | உடம்பு |
| | போர் | போர்பு |
| | புறம் | [26]புறம்பு |

இனி, சிறுமை பெருமை குறுமை நெடுமை அண்மை பன்மை சின்மை நுண்மை புதுமை முதலிய பண்புப்பெயர்களின் முதனிலையோடு கு - சேர்ந்து பகுதியாய் வழங்குதல் உளது.

| | | | |
|---|---|---|---|
| + கு : | சிறு | — | சிறுகு |
| | பெரு | — | பெருகு |
| | குறு | — | குறுகு |
| | நெடு | — | [27]நெடுகு |
| | அண் (அணு) | — | அணுகு |
| | பல் | — | பல்கு |
| | சில் | — | [28]சில்கு |

24. 'மாரி மலைமுழைஞ்சில்' (திருப்பாவை, 23).
25. 'எல்லும் எல்லின்று' (குறுந். 390).
    'என்றைத் தொட' (கந்தபு. விந்த : 4)
26. 'தன்னைப் புறம்பழித்து' (குறிஞ்சிக்கலி, 15).
27. 'நெடுக்கல் குறுக்கல்' சிறுபஞ்ச. 69.
28. அகம். 17.

நுண் (நுணு) — நுணுகு
புது — [29]புதுக்கு

பகுதியோடு கு, து - முதலிய எழுத்துக்கள் சேர்ந்துவருதல் உண்டு. அத்தகையவற்றுள் தெளிவாகத் தோன்றுமவற்றை முதற்கண் நோக்குவோம்.

+ கு: போ — [30]போகு
[31]ஆ — [32]ஆகு
உள் — [33]உள்கு
எள் — [34]எள்கு
புல் — [35]புல்கு
உண் — [36]உண்கு
விடு — [37]விடுக்கு

29. 'புதுக்குவானும்' (கம்ப. மிதிலைக். 75.)

30. போகு என்னும் பகுதியி னடியாகப் பிறந்த சொற்களே பண்டைச்செய்யுட்களிற் பயில்கின்றன. 'திரிகாய் விடத்தரொடு காருடை போகி' (பதிற். 13). 'வார்தல் போகல்' என்பது தொல்காப்பியம். (சொல். உரி. 21.)

31-32. 'சான்றோர் பால ராப, சாலார் சாலார் பாலரா குபவே' (புறம். 218).

33-34. கம்ப. கார்காலப். 104. 'உள்கிய பொருளெலா முதவி யற்றபோ, தெள்கல்'.

35. 'புல்கும் அணையாந் திருமாற் கரவு' (முதல்திருவந்தாதி, 53).

36. 'விடுக்குவெனுயின்' (நற். 350.)

37. 'உண்கா கொற்று' (தொல். உயிர்ம. 22 உரை.)

| | | | |
|---|---|---|---|
| + து. | நீள் | — | நீடு |
| | [38]தோள் | — | தோண்டு |
| | [39]நள் | — | நடு |
| | [40]தொள் | — | தொடு |
| | [41]தள் | — | [42]தடு |
| | விள் | — | விடு |

இனி, உதடு என்று பிற்காலத்தில் வழங்குஞ் சொல்லின் தொல்வடிவம் இதழ் என்பதாகும். அதனோடு து-சேர்ந்து இதடு என்றாகி, அதுவே உதடு என்று வழங்குகின்றது எனத் தோன்று-கின்றது.

இதுகாறுங் காட்டிய உதாரணங்களால் பகுதி-யோடும் சொல்லோடும் கு, து முதலிய விகுதிகள் சேர்ந்திருத்தல் உண்டென்பது நன்கு தெளிவாகும். இனி, வினைப்பகுதிகளைப் பிறவினை ஆக்குதற்கும், தொழிற்பெயர் ஆக்குதற்கும், து-விகுதி வருதல் உண்டு. அதனை ஈண்டு நோக்குவோம்:

38. 'கடறேட்டா ரெனின்' (கம்ப. குலமுறை. 8).

39. 'நண்பகல்: 'நண்பகல் வேனில்'. (தொல். அகத். 11). நடுப்பகல் என்று வழங்குகின்றது.

40. 'கதவந் தொளைதொட்டார்க்கு' (முத்தொள். 14).

41. 'தள்ளா தோரிவட் டள்ளாதோரே' (புறம். 18).

42. 'உண்ணுநர்த் தடுப்ப'. (அகம். 2). 'தடுப்ப - தட்ப'.

| | | | |
|---|---|---|---|
| + து : | நட | — | *நடத்து |
| | வர | — | [43] வரத்து |
| | கிட | — | கிடத்து |
| | சேர் | — | [44] சேர்த்து |
| | உறு | — | உறுத்து |

சில பகுதிகளில் முதற்பகுதியோடு பிற விகுதி சேரும்போது இடையே உகரஞ் சேர்தல் உண்டு.

நண் என்பது ஒரு பகுதி.

[45] 'மாலை நண்ணித் தொழுதெழுமினோ'

என்னும் அடியில் அப் பகுதி வந்துளது காண்க. அப் பகுதியோடு கு—விகுதி சேருமிடத்து இடையே உகரம் வந்து, நணுகு என்று வழங்குகின்றது.

*அஃறிணைப்பொருள்களைத் தொழிற்படுத்துதற்கண்ணே து - விகுதி வரும். உயர்திணைக்கண்ணும் விருப்பமில்லாதானொருவனை வற்புறுத்தித் தொழிற்படுத்தற்கண் இவ்விகுதி வரும். பிறஉயர்திணைக்கே வி, பி - விகுதிகள் வரும். இதன் விவரத்தைப் 'பிறவினையின் வேறுபாடு' என்னுங் கட்டுரையில் எழுதியுள்ளேன். ஆண்டுக் காண்க.

43. வருவி என்னும் பொருளில் வரத்து என்பது தென்னாட்டிற் பெருவழக்கு. இது பெயரும் ஆகும்.

44. சேர்த்து என்பதே பழைய வழக்கு. இதில், து, சு - ஆய்த் திரிந்து சேர்சு என்று தெலுங்கில் வழங்கும்.

45. திருவாய்மொழி, 9. 10 : 1

[46]'நம்புமென் சிந்தை நணுகும்வண்ணம்'

என்பது காண்க. இவ்வாறே அண் - அணுகு என்பன காண்கின்றன.

[47]'அண்ணிய தாயும் அகன்றும்'

[48]'அகலில் அகலும் அணுகில் அணுகும்'

இவ்வாறே நுணுகு என்பதிலும் உகரஞ் சேர்ந்துளது.

[49]'தோன்றா நுணுகிய நுசுப்பினர்'

என்பது காண்க. கொளுவு, கொளுத்து, செலுத்து என்பவற்றிலும் கொள், செல் என்னும் பகுதிகளோடு உகரஞ் சேர்ந்துளது.

[50]'அறிவென்னுந் தாள் கொளுவி'

[51]'கோணெறி கொளுத்தி'

[52]'ஓராழி கொண்டு செலுத்துதேர்'

என்பன காண்க.

---

46. திருவாசகம், 40, 6
47. கூர்ம. பொது, 12
48. திருவாய்மொழி, 1, 7 : 10
49. சீவக. 2611
50. மூன்றாந் திருவந். 12
51. பெருங். உஞ்சைக். 58 : 70
52. பாரத. பதின்மூம். 40

# இரண்டாம் பிரிவு

## 1. பகுதிகள்

மேலேகாட்டிய விதிகளின்படி அமைந்துள்ள சிலபகுதிகளை இனி நோக்குவோம்: முதலில் குவ்வீற்றுப் பகுதிகளைக் காண்போம்.

இக்காலத்தில் குவ்வீற்றுப்பகுதியவாய் வழங்குபவற்றுள் கு-விகுதியே என்றும் முதனிலை வேறு யுளதென்றும் மேலே அறிந்தாமன்றே? அம் முறையில் அமைந்துள்ள பகுதிகளுள் சிலவற்றிலுள்ள முதனிலையை 'மெய்யெழுத்துக்களின் திரிபு' என்னுங் கட்டுரையில் தெரிவித்துள்ளேன். இண்டு, நீங்கு என்னும் பகுதியை நோக்குவோம்:

நீங்கு என்பது விரிந்தகலுதல்; பிரிதல் என்னும் பொருளது. இதில் கு-விகுதியாயின் பகுதி யாது? நீங் என்பது பொருளுடையதன்றாகலின் அது பகுதியாகாதன்றே? நீங்கு என்பதில் ஙகரம் பிறிதோரெழுத்தின் திரிபாகும். ஆயின், எந்த வெழுத்துத் திரிந்துளது என்று நோக்குவோம். நீள்கு என்பது நீங்கு என்று திரிந்துளது. நீளுதல் - நெடிதாதல், நெடிதுபோதல்; அப்பொழுது முன்னிருந்தவிடத்தினை விடுதல் நேரும். அகலுதல் என்னுஞ் சொல்லின் பொருளை இதனோடு ஒப்பிடுக. அகலல் - அகலமாதல்; ஆகவே, முன்னிருந்தவிடத்தை விடல் நேரும்.

[53]' நீங்கிற் றெறாஉம் குறுகுங்காற் றண்ணென்னுந்
தீயாண்டுப் பெற்றாள் இவள்'

என்னுங் குறளால் இப்பொருள் தெளிவாதல் கூடும். இச்செய்யுளில் நீங்கு, குறுகு என்பன தம்முள் மாறு-பட்ட பொருளை உடையன. குறுகு என்னுஞ் சொல் குறு(மை) என்பதினின்று அமைந்ததாகலின் இடம்-குறிதாதல் என்னும் பொருளது. அணுகு என்ப-தும் இத்தகையதே. இடம்குறிதாதல்—சமீபித்தல். இதற்கு எதிர்மறையாகிய நீங்கு என்பது இடம் நெடிதாதல் என்னும் பொருளதே யாகுமன்றோ? ஆகலின், அது நீள் என்னுஞ் சொல்லினின்று அமைந்ததாகும்.

இவ்வாறே இயங்கு என்பது இயல் என்பத-னோடு கு-சேர்ந்தது என்று தெரிகின்றது.

இயல் + கு = இயங்கு

[54]' காண்வர இயலி'

[55]' இயங்குதி'

இவ் விரண்டு சொல்லும் நடத்தல் என்னும் ஒரே-பொருளை உடையன.

தொடக்கு என்னும் பகுதியில் கு-விகுதியாய் நீங்கின், தொடக்—என்பது பொருளுடையதாதல்

53. குறள், 1104

54. புறம். 133

55. அகம். 12

இன்று. ஆகலின், அதன் முதனிலை தொடு என்பதன் அடியில் தோன்றிய தொடர் அல்லது தொடல் என்னுஞ் சொல்லாயிருக்கலாம் என்று தோன்றுகின்றது.

மங்கு, முங்கு

மங்குதல் என்பது மழுங்குதல் என்னும் பொருளது. இப்பொருளை நோக்கின், மங்கு என்பது மழுங்கு என்பதன் மரூஉ என்பது புலனாகும். மழுங்கு என்பதில் கு - விகுதியாமாகலின், அதன் முதனிலை மழ் என்பது ஆகும் எனத் தோன்றுகின்றது. மழுங்கியது என்னும் பொருளில் வழங்குகின்ற மண்ணை என்னுஞ் சொல்லை நோக்கின், மழ் என்னும் முதனிலை உண்டென்பது அறியலாகும். மழ் + ந் + ஐ = மண்ணை.

[56] 'நுதிமுக மழுகிய மண்ணை வெண்கோட்டு'

என்னுமிடத்து, 'மண்ணை வெண்கோடு—மழுமட்டையான கோடு' என்று உரையாசிரியர் எழுதியிருப்பது காண்க. மழுங்கு என்பதேயன்றி, மழுகு என்றும் வழங்குதல் உண்டு என்பது ஈண்டுக் கண்டாம். முழுகு என்னும் பொருளில் வழங்கும் முங்கு என்னுஞ் சொல் ஈண்டு ஒப்பிடற்பாலது. முழுகு என்பது ழகரத்தை ஊர்ந்துநின்ற உகரம் கெட முழ்கு என்றாகும். முழ்கு என்பது முங்கு என்று மருவும். மங்கு (மழ்கு), முங்கு (முழ்கு) என்னும் இச்

56. அகம். 24

சொற்களை நோக்கின், ழகாரமும் முன்னின்ற ககாரத்தின் இனமெல்லெழுத்தாய்த் திரிந்துளது என்பது அறியலாகும்.

2. இனி சுவ்வீற்றுப்பகுதிகளை நோக்குவோம்: பகுதியின் ஈற்றில் இருக்குஞ் சு - விகுதியாகும் என்றும், முதனிலை வேறொன்று இருக்குமென்றும், 'மெய்யெழுத்துக்களின் திரிபு' என்னுங் கட்டுரையில் எழுதியுள்ளேன். அம் முறையின்படி, ஈண்டும் நோக்குவோம்.

துஞ்சு

உறங்குதல் என்னும் பொருளுடைய துஞ்சு என்னுஞ் சொல் துய் என்னும் முதனிலையினின்று அமைந்ததாகும். துயில் என்பதுவும் இம் முதனிலையினின் றமைந்ததுவே.

3. இனி, டு - விகுதியுள்ள பகுதிகளை நோக்குவோம்: இயல்பாக டு - விகுதி இல்லை; து - விகுதியே புணரும் நிலைக்கண், டு - ஆகின்றது. று - விகுதியும் இத் தன்மையதே. உதாரணமாக—

உருட்டு

துயிற்று

என்னுஞ் சொற்களில் முறையே டு - விகுதியும் று - விகுதியும் வந்துளது என்பர். உருள், துயில் என்னும் ளகரலகரவீற்றுச்சொற்களோடு பிறவினைப்பொருளில் வந்த து - சேர, உருட்டு, துயிற்று என்னும் வடிவம் அமைந்துளது. இவ்வாறே பிறவும் காண்க.

இவ்வாறே சூடு என்னும் பகுதியும் சூழ் என்னும் பகுதியோடு து-விகுதி சேர்ந்து அமைந்ததாகும்.

சூழ் + து = சூடு

[57] ‘சூடிக் கொடுத்தாளைச் சொல்’

என்பதில், சூடு என்பது சூழச்செய்தல், (கூந்தலைச்) சூழ வைத்தல் என்னும் பொருளது. ‘மௌவி, சூழ்கின்ற மாலையைச் சூடிக்கொடுத்தவள்’ (இராமாநுச. 16) என்பதை அறிக. சூட்டு என்பது சூடு என்பதன் பிறவினை.

[58] ‘சூடுகின்றதுமிலை சூட்டுகின்றதுமிலை’

என்பது காண்க.

இனி, ணகாரவீற்றுப்பகுதிகளைப் பிறவினையாக்குதற்கு வருகின்ற து-விகுதி திரிந்து டு-ஆய் நிற்கும். காட்டு, பூட்டு என்பன காண்க.

காண் + து = காட்டு

பூண் + து = பூட்டு

உண் என்னும் பகுதி திரிந்து பெயராகிய ஊண் என்பதனோடு து-விகுதி சேர்ந்து பிறவினைப்பகுதியாகும்.

ஊண் + து = ஊட்டு

57. திருப்பாவை தனியன்

58. திருவாசகம் 5:31

இனி, தோண்டு என்பது தோள் என்னும் முதனிலையோடு து - சேர்ந்து அமைந்ததாதல் போன்று, தாண்டு என்பது தாள் என்னுஞ் சொல்லினின்றமைந்த தாகலாம். தாண்டுதல் - தாள் எடுத்து வைத்தல், குதித்தல். தாள் - பாதம்.

4. இனி றவ்வீறுயுள்ள பகுதிகளை நோக்குவோம்:

தீற்று என்பது ஊட்டு என்னுஞ் சொல் போன்றது; இது தின் என்னும் பகுதி நீண்ட தீன் என்னுஞ் சொல்லோடு து - விகுதி சேர்ந்த பிறவினைப்பகுதி. தின்னச்செய், ஊட்டு என்பது இதன் பொருள். தீன்—உணவு. மலையாளத்தில் தீற்றி என்னுஞ் சொல் உணவு என்னும் பொருளில் வழங்குகின்றது.

[59] 'தீன் உறுதன.'
[60] 'நென்மாவல்சி தீற்றி.'

இவ்வாறே ஈன் என்னும் பகுதியோடு து - விகுதி சேர்ந்து, ஈற்று என்னுஞ் சொல் அமைந்துளது. தலையீற்றுப்பசு என்பதுபோன்ற வழக்கினை அறிக.

சுற்று என்னும் பகுதி சூழ்தல், சூழ்ந்துவருதல் என்னும் பொருளது. இது சூழ் என்னும் முதனி-

59. கம்ப. சேது. 28

60. பெரும்பாண். 343

னிலையின் குறிய வடிவமாகிய சுழ் என்பதனேடு து—விகுதி சேர்ந்தமைந்த சொல். சுழ்+து=சுற்று.

[61]'போகா தெறும்பு புறஞ்சுற்றும்'

[62]'காலிற் சுற்றிய நாகம் என்று'

என்னுஞ் செய்யுளானும், 'கோவிலைச் சுற்றி வந்-தான்' என்பதுபோன்ற வழக்கானும் இப்பொருள் வலியுறுதல் அறிக.

கீறு என்பது கிழித்தல் (கீளுதல்) என்னும் பொருளில் வழங்கும். இச்சொல், கீழ், அல்லது கீள் என்னும் பகுதியோடு து - சேர்ந்து அமைந்ததாகும். து - விகுதி சேராதவிடத்துக் கீண்டான் என்றும், து - விகுதி சேர்ந்தவிடத்துக் கீறினன் என்றும் ஒரே பொருளில் இறந்தகாலவினை வரும். இது கீழ்து என்றும் வந்துளது.

[63]'பரிவாய் கீண்ட சீரானை'

[64]'பரிகீறிய அப்பன்'

'கீழ்து பிளந்த சிங்கம்' (திருவாய். 7. 4: 6)

என்பவற்றில், இச்சொற்கள் ஒரே பொருளில் வந்துள்ளன காண்க.

61. நாலடி, 337

62. கம்பரா. புனல்விளை. 11

63. பெரியதிருமொழி, 2. 5 : 1

64. பெரியதிருமொழி, 4. 2: 7

[65] 'கீறல் கீண்டல் கிள்ளல் கிழித்தல்'

என்னும் நிகண்டு காண்க.

5. இனி, து - விகுதி சேர்ந்துள்ள பகுதிகளை நோக்குவோம்.

உலா என்னும் பகுதியோடு பொருள் வேறு-பாடின்றியே து - விகுதி சேர்ந்து உலாத்து என்று அமைந்துளது.

சாத்து என்பது சாரச்செய் என்னும் பொருளில் வழங்குகின்றது. 'கதவு சாத்து' என்பதில் சாத்து என்னுஞ் சொல்லின் பொருளை நோக்கின், சார் என்பது பகுதியாகும் என்பது புலனாகும். சார் + து = சார்து. சார்து என்பது மருவிச் சாத்து என்றாகியுளது. பேர்தி என்பது பேத்தி என்று வழங்குதல் ஈண்டைக்கு ஒப்பிடற்பாலது. நீத்தம் என்பது நீர் என்னுஞ் சொல்லினின்று அமைந்ததென்பது டாக்டர் கால்ட்வெல் எழுதியிருப்பதனானும் அறியலாகும். நீர் + து + அம் = நீர்தம்—நீத்தம். இச்சொற்களில், ரகாரம் தன் முன்னின்ற தகாரமாய்த் திரிந்துளது. இச்சொற்களில் ரகரம் கெட்டது எனினும் அமையும்.

விரும்பு என்னும் பொருளில் வழங்கும் நத்து என்னுஞ் சொல்லில், து—விகுதியாகுமாகலின், முத-

65. பிங்க. 7 : 390

னிலை நய் (நய) என்பதாகும். நய்+து=நய்து—நத்து. கய்ப்பு(கைப்பு)—கயப்பு என்பவற்றை நோக்கின், நய் - நய என இரண்டு வடிவம் இருத்தல் கூடும் என்பது போதரும்.

யகரம் இடையண்ணத்திற் பிறப்பதாகலின், நய்து என்பதில் யகரத்தை அடுத்திருக்குந் தகாரம் அவ் யகாரம் பிறக்குமிடத்திற் பிறப்பதாகிய சகாரமாய்த் திரியும். நய்து=நய்சு. நய்சு என்பது பின்பு நச்சு என்று திரிந்துளது. யகரமில்லாதிருப்பின், நத்து என்பது நச்சு என்று திரியாது. கொத்து, (கொய்து), கொச்சகம் (கொய்தகம், கொய்சகம்) என்பவையும் நத்து, நச்சு என்பவையும் முறையே ஒப்பிடத்தக்கன.

குந்து என்பது உட்கார்தல் என்னும் பொருளில் வழங்குகின்றது. இது குள் என்பதனோடு து - விகுதி சேர்ந்து அமைந்ததாகும். இப்பொருளில் குள் என்பது துளுவில் உளது. ஆகலின், குள் என்பதுவே குந்து என்பதன் முதனிலை என்று கோடல் அமையும்.

நீந்து என்பது நீர் என்னுஞ் சொல்லோடு து - விகுதி சேர்ந்தது; இடையே ந் தோன்ற, ரகரம் கெட்டது.

6. இனி புவ்வீற்றுப்பகுதிகளை நோக்குவோம்: இவ்வீற்றுப்பகுதிகளில் பு, விகுதியே ஆகுமாகலின், முதனிலை பிறிதொன்றாயிருக்கும்.

எழும்பு என்பது எழு என்னும் பகுதியோடு பு - சேர்ந்தது என்பது தானே போதரும். எழுப்பு என்பது பிறவினை. [எம்பு என்பது எழும்பு என்பதன் மரூஉ.]

நிரம்பு என்பது நிரல் என்னுஞ் சொல்லோடு பு - விகுதி சேர்ந்தது என்றல் அமையும்.

இயம்பு என்பது இயம் (வாத்தியம்) என்னுஞ் சொல்லோடு பு - விகுதி சேர்ந்ததெனத் தெரிகின்றது.

[66]'முழவதிர முரசியம்ப.'

முரசு இயம்ப என்பது பண்டைச்செய்யுட்களிற் பெருவழக்கு. இதனல் இவ்வூகம் வலியுறும்.

இச்சொல் பின்னர்,

[67]'கடிமரந் தடியு மோசை தன்னூர்
நெடுமதில் வரைப்பிற் கடிமனை யியம்ப'

என்று ஒலிக்கு வழங்கிற்று. இவ்வாறு, ஒலிசெய்தலைக் குறிக்கும் இச்சொல் பின்னர், பேரொலிபடப் பேசுதலையுங் குறித்து, நாளடைவில் 'சொல்லுதல்' என்னும் பொருளில் வழங்கியதாகும்.

கூம்பு என்பது குவி என்பதன் முதனிலையாகுங் குவ் என்பதன் நெடிய வடிவமாகிய கூவ் என்பதனேடு பு-விகுதி சேர்ந்து அமைந்ததாகலாம்.

66. பட்டினப். 157
67. புறம். 36

[68] 'குண்டுநீ ராம்பலுங் கூம்பின இனியே'

என்பதில் கூம்பு என்பது குவிதல் என்னும் பொருளதாதல் அறிக. கூப்பு என்பது இதன் பிறவினை. இது குவித்தல் என்னும் பொருளது.

[69] 'செறிதொடி முன்கை கூப்பி'

என்பதில் கூப்பி என்பது குவித்து என்னும் பொருளதே.

*68. குறுங், 122*

*69. பட்டினப். 154*

## 2. பெயர்கள்

(1) இனி, ஈண்டு முதற்கண், கு—விகுதி சேர்ந்து அமைந்த பெயர்ச்சொற்களை நோக்குவோம்: பெயர்ச்சொற்களோடு கு — விகுதி பொருள் வேறுபாடு இன்றியே சேர்ந்திருத்தல் உண்டு.

தெள்கு — தெள் (தெள்ளுப்பூச்சி)

[70] 'சிறியதெள்கு துள்ளி'

பீர்க்கு — பீர்

புறகு — புறம் (பொறெகெ - கன்னடம்)

[71] 'வன்றொண்டன் புறகு'

உடங்கு — உடன்

[72] 'ஒலிகேட்டோன் உடங்கெழில் யானையங்
குண்டென வுணர்தல்'

பாங்கு — (பால் + கு)

நாக்கு என்னுஞ் சொல் கன்னடத்தில் நாலகெ என்றும், தெலுங்கில் நாலுக, நால்க என்றும் வழங்கு-தலின், அதன் முதனிலை நால் என்பதாகும். நால் + கு = நால்கு—நாக்கு. லகாரம் முன்னின்ற ககாரமாய்த் திரிந்தது. இனி, லகாரம் றகாரமாகி நாற்கு என்று வழங்கி, அது பின்னர் நாக்கு என்று மருவிற்றெனினும் அமையும். எவ்வாறாயினும் நால்

70. அரிச்சந். பாயிர.

71. பெரியபு. விறன்மிண்ட. 7

72. மணிமே. 27: 32

என்பதுவே முதனிலை என்றற்கு இழுக்கில்லை. நால் என்பதன் லகரம் கெட்டு நா என்று வழங்கப்பட்டதாகலாம்.

வங்கு என்பது வளைவான இடத்தைக் குறிக்கும்.

[73] 'வங்கினைப் பற்றிப் போகா'

என்பது காண்க. இனி, இது நரி முதலியவற்றின் வளைக்கும் வழங்கும்; வளைவாய இடம் உடையது என்பது இதன் பொருளாகும்.

[74] 'குழிநரியின் வங்குக்குள்ளே வழுகி வீழ்வாராம்.'

கு—பெயர்ச்சொற்களில் பெரும்பாலும் இடப்பொருள்தரும் விகுதியாய் வருகின்றது. பாங்கு, ஆங்கு, மேற்கு, கிழக்கு முதலியன காண்க. வளை என்னுஞ் சொல்லின் முதனிலையாகிய வள் என்பதனோடு கு—சேர்ந்து வங்கு என்றாகியுளது.

தீங்கு என்பது தீ என்னுஞ் சொல்லினின்று அமைந்ததாகும். தீ என்னுஞ் சொல்லோடு தன்மை என்னும் பொருளில் மை விகுதி சேர்ந்து தீமை என்று வரும். அதில் ஐ கெட நின்ற தீம் என்பதனோடு கு சேர்ந்து தீங்கு என்று அமைந்திருக்கலாம். தீம் என்பதனோடு பு - விகுதி சேர்ந்து அமைந்த தீம்பு என்னுஞ் சொல் இண்டைக்குக் கருதற்பாலது.

73. பெரியபு. கண்ணப்ப. 116
74. வள்ளியம்மை கதை

வடக்கு என்பது வடல் என்னுஞ் சொல்லோடு கு - விகுதி சேர்ந்தமைந்த சொல் என்பது தெரி-கின்றது. 'தென்வடல்' என்னுந் தொடர் பெரு-வழக்கா யுளது.

கலிங்கு என்பது ஏரி நிறைந்தபின் வரும் வெள்ளம் புறம் போதற்காக ஏரியின் இரண்டு கோடியிலும் அமைத்துள்ள இடம். இது கலிழ் என்னுஞ் சொல்லோடு கு - சேர்ந்ததாகும். கலிழ் - கலங்கிய நீர்.

75 'கலிங்குக டிறந்த வன்றே.'

(2) இனி, சுவ்வீற்றுப் பெயர்ச்சொற்களை நோக்குவோம்.

சு - விகுதி பொருள்வேறுபாடு இன்றியே பெயர்ச்சொல்லோடு சேர்தல் உண்டு.

புலைசு—புலை என்பதனோடு சு - சேர்ந்தது. இதுவும் துவ்வின் திரிபாகும்.

76 'புலைசு தேன்கள் ஒருவுதல்'

என்பது காண்க.

முடிச்சு—என்பது முடி என்னும் பெயர்ச்சொல்-லின் பொருளில் வழங்குகின்றது. இதில் சு - துவ்வின் திரிபாகும். முடிபோட்டது, முடியுடையது என்னும் பொருளில் து - விகுதி சேர்ந்து, அது, மேல்நின்ற இகரத்தால் சு - ஆய்த் திரிந்துளது.

75. சீவக. 2476
76. யசோதர. 4 : 17

பஞ்சு என்பது பன் என்னுஞ் சொல்லோடு சு சேர்ந்தது என்று தெரிகின்றது.

77'பன்னலம் பஞ்சிக் குன்றம்'

என்னுமிடத்து, பன் - என்பது எஃகுதல் என்னும் பொருளது. 'எஃகுதலை யுடைய பஞ்சியாகிய மலை' என்று நச்சினார்க்கினியர் பொருள் எழுதியிருப்பது காண்க. பனுவல் என்பதும் பன் என்பதினின்-றமைந்ததே.

நெஞ்சு என்பதில் சு - நீங்கின் 'நெஞ்' என்பது எஞ்சும். நெஞ் என்பதில் ஞகரம் னகரத்தின் திரி-பாகும். நென் என்பது நெனை (நினை) என்பதன் முதனிலை; ஐகாரம் அடுத்து நிற்றலின், நேனை என்பதனினும் நினை என் றொலித்தல் எளிதாகலின், அவ்வாறு திரிந்துளது. கன்னடமொழியில் 'நெனெ' என்றே வழங்குகின்றது.

'நெநெ ஸ்மரணே'

என்பது கன்னட சப்தமணி தர்ப்பணம்.

78'நெஞ்சே நீ நினையாய்'

என்பது அறிக.

(3) இனி, டு-விகுதியாயுள்ள பெயர்ச்சொற்களை நோக்குவோம்: இண்டும் து - விகுதியே திரிந்து டு - ஆகியுளது.

77. சீவக. 2274
78. திருநாவுக். திருஅங்க மாலை.

[81] 'மூளைச்சேற்றில் வழுக்கி விழுந்துகான்
மொழிபெயர்ந்தொரு கால்முட மானவும்'

என்று செய்யுளிலும் வந்துளது.

முகடு என்பது மேலிடத்தைக் குறிக்கும். இண்டும் டு - துவ் விகுதியின் திரிபாகும். இதனை நோக்கின், முகள் என்பதனோடு து - விகுதி சேர்ந்து முகடு என்றாகியுளது எனல் புலனாகும். மலையாளத்தில் முகள் என்னுஞ் சொல் இப்பொருளில் வழங்குதல் இதனை வலியுறுத்துகின்றது.

தோடு என்பது மலையாளத்தில் நீண்ட கால்வாய்க்குப் பெயராய் வழங்குகின்றது. இது தோள் என்னும் முதனிலையோடு து - சேர்ந்த சொல்; தோண்டப்பட்டது என்பது பொருள்.

மூடு என்பது மூளை (முளைத்தது), சிறுசெடி இவற்றிற்குப் பெயராய்த் தென்னாட்டில் வழங்குகின்றது. 'இந்த வயலில் மூடு போதாது', 'இந்தப் பாத்தியில் மூடு எடுபட்டுப் போயிற்று' என்பது வழக்கு. இச்சொல் (மூடு), முளை என்பதன் முதனிலை யாகும் முள்=மூள் என்பதனோடு து - சேர்ந்தமைந்த தாகும்.

குருடு என்பது கண் தெரியாதது, கண் தெரியாமை என்னும் பொருளது. குட்டி (குர்ட்டி), குருளை என்னுஞ் சொற்கள் கண்திறக்காமற் பிறக்-

81. கலிங்கத் 6 - 12.

கும் விலங்கின் இளையதற்குப் பெயராகத் தொல்-காப்பியனார்[82] கூறியுள்ளார். இவற்றை நோக்கின், குருடு என்பதில் து-விகுதியும், குருளை என்பதில் ஐ-விகுதியுஞ் சேர்ந்துள்ளன என்பது புலனாகும். அவ்வாறாயின், குருள் என்னுஞ்சொல் கண்தெரி-யாமை என்னும் பொருளை தாகும்.

ஏடு என்பது [83]பூ, [84]பூவிதழ் இவ் விரண்டு பொரு-ளிலும் வழங்குகின்றது. இப் பொருள்களை நோக்கு-கையில், இச்சொல், இதழ் என்னுஞ் சொல்லோடு து-விகுதி சேர்ந்து இதடு என்றாகியது, பின்னர் ஏடு என மருவியிருத்தல்வேண்டும் எனத் தோன்று-கின்றது. இயலும் - ஏலும்; இலது - லேது என்பன காண்க. அவ்வா றாயின், இச் சொல் இதழ் உடை-யது என்னும்பொருளில் முதற்கண் பூவிற்கு வழங்கி-யிருக்கும்; பின்னரே து-விகுதிக்குப் பொருளின்றி முதனிலையின் பொருளில் வழங்கப்பெற்றிருக்கும்.

(4) இனி, று-விகுதி சேர்ந்துள்ள பெயர்ச்-சொற்களை நோக்குவோம்: இதுவும் (று), து-விகுதி யின் திரிபே என்பது மேலே கூறப்பட்டது. சில சொற்களில் பொருள்வேறுபாடு இன்றியே இவ் விகுதி சேர்ந்துளது. உதாரணமாக—

கால் — காற்று

என்பது காண்க. கால் என்பதுவே தொல்வடிவ-

82. மரபியல். 6, 8
83. திருஞான. இன்னம்பர் : 11
84. பொருந. 159

மாதல் தெலுங்கு கன்னட மொழிகளில் முறையே காலி, காளி என்று வழங்குதலால் வலியுறும். இனி, விகுதிக்குப் பொருளுடைய சொற்களை நோக்குவோம்.

எல் — என்று

[85]‘ஆழி சென்றென் றடைந்தபின்.’

என்பது காண்க. எல் என்பது ஒளி என்னும் பொருளது. என்று என்பது எல் உடையது (ஞாயிறு) என்னும் பொருளுடையது. இனி, எல் என்பதுவே ஞாயிற்றுக்கும் பெயராய் வழங்கப்பட்டுளது.

[86]‘எல்லும் எல்லின்று

என்பது காண்க. இண்டு, எல் என்பது ஞாயிற்றுக்கு ஆகுபெயர்.

தவல் என்னும் பெயர்ச்சொல்லோடு து-விகுதி சேர்ந்து தவறு என்றாகின்றது. இவ்வாறே கவறு என்னுஞ் சொல்லும் கவல் என்பதனோடு து-சேர்ந்து அமைந்ததாகும்.

கயில் என்பது பூண்கடைப்புணர்வு(=மூட்டுவாய்) என்னும் பொருளுடையது.

[87]‘பிடர்த்தலை பூணின் கடைப்புணர்வு கயிலே’

என்னும் நிகண்டு காண்க. கயிறு என்பது கயில்

85. அரிச்சந். விவாக. 194
86. குறுந். 390.
87. பிங்கலம். 10 : 269.

72108

என்பதனோடு து - விகுதி சேர்ந்த சொல் எனத் தோன்றுகின்றது; மூட்டுவாய் உடையது என்பது பொருளாகும்; இரண்டுதலைப்பும் ஒன்றுசேர்க்க ஆகுவது.

*சோறு என்பது சொல் என்னும் பெயர்ச்சொல்லோடு து - சேர்ந்து அமைந்தது.

சொல் + து = சோறு; சொல் என்பதன் முதலெழுத்து நீண்டது. சொல் = நெல்.

[88] 'சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் தோற்றம்-
போல்'

என்பது காண்க. இதனால், சோறு என்பது நெல்லால் ஆகிய உணவிற்குப் பெயர் என்பது அறியப்படும். இச்சொல் பின்னர், தன்பொருளினின்று நீங்கிப் பிறவுணவினையுங் குறிப்பதாயிற்று. அதனால், நெல்லரிசியுணவு 'நெல்லுச்சோறு' எனப்படுவதாயிற்று. வரகஞ்சோறு, கம்பஞ்சோறு, நெல்லுச்சோறு முதலிய வழக்கு அறிக.

[89] 'வரகரிசிச் சோறும்'

[90] 'நெல்லுச்சோறே கம்பஞ்சோற் றினைநீ
யெடுத்துச் சுமப்பாயே'

*இதனைக் குறித்துத் தமிழ்ப்பொழிலில் (10: 9) எழுதியுள்ளேன்.

88. சீவக. 53.

89. தனிப்பா. அவ்வை.

90. தனிப்பா. கம்பர்.

என்பன காண்க. எள்ளினது நெய் என்னும் பொருளுடைய எண்ணெய் என்னுஞ் சொல் தன்பொருளினீங்கி வேப்பெண்ணெய், தேங்காயெண்ணெய், இருப்பெண்ணெய், மண்ணெண்ணெய் என்றும், எள்ளெண்ணெய் நல்லெண்ணெய் என்றும் வழங்குதல் ஈண்டு ஒப்பிடற்குரியது. இவ்வாறு வழங்குவது ஆகுபெயர் என்ப.

[91]'சொன்றி'

என்பதும் சொல் என்பதினின்றமைந்ததே. பன்றி என்பதுபோல, சொன்றிச் சோறு என்றல் வழக்கு.

மன்று என்பது மரன் என்பதனோடு து-சேர்ந்து அமைந்த சொல். மரன் + து = மரன்று—மர்ன்று—மன்று; மரத்தின் அடியிடத்தது என்பது பொருள். மன்றம்—'ஊர்க்கு நடுவாய் எல்லாரும் இருக்கும் மரத்தடி' என்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் எழுதியிருப்பது அறிக. மரன்று மர்ன்று என்பதில் 'ன்று' என்னும் இணை யொலியினால் ரகரம் கெட்டது. வருதல், வருகை, வரல் முதலிய பெயர்களிலும், வருகின்றான், வருவான் முதலிய வினைமுற்றுக்களிலும், வரின், வர, வாராத என்னுந் தொடக்கத்து எச்ச வினைகளிலும் உள்ள ரகரம் வந்தான், வந்து, வந்த என்னுஞ் சொற்களில் உள்ள ந்த என்னும் இணையொலியினால் கெட்டிருத்தல் ஈண்டு அறிதற்பாலது.

(5) இனி, து-விகுதி சேர்ந்த சொற்களை நோக்குவோம்:

*91.* மதுரைக். *212*

சில சொற்களில் பொருள்வேறுபாடு இன்றியே து-விகுதி சேர்ந்துளது. உதாரணமாக—இருட்டு, காற்று என்னுஞ் சொல்லைக் கொள்ளலாம். ஆயின், இருட்டுக்காலம் என்பதுபோன்றவிடத்தில் இருளையுடையது என்னும் பொருளில் இச்சொல்லில் முதற்கண் சேர்ந்த து-விகுதி பின்னர்ப் பொருளின்றி வழங்கலாயிற்று என்று தோன்றுகின்றது.

கொத்து என்பது தானியமாகக் கொடுக்குங் கூலிக்குப் பெயராய் வழங்குகின்றது. பயிர்த்தொழிலில் நடுதல், களைபறித்தல், அறுவடைசெய்தல் முதலிய எல்லாத்தொழில்களிலும் வேலைசெய்தோருக்குத் தானியத்தையே கூலியாகக் கொடுக்கும் வழக்கம் இன்றும் உளது. வரகு கேழ்வரகு சோளம் கொள் முதலிய எல்லாப்பயிர்களையும் அறுவடை செய்தோருக்கு அவ்வத் தானியத்தையே கூலியாகக் கொடுப்பர். இதனால், அவர்கள் கொய்த தானியத்தையே—கூலத்தையே—கொடுக்கும் முறை அறியப்படும். இவற்றை நோக்கின், கொத்து என்பது கொய்து என்பதன் திரிபாகும் என்று எளிதிற் புலனாகும். மலையாளத்தில், 'கொய்து' (கொய்த்து) என்பது அறுவடைக்குப் பெயராய் வழங்குகின்றது. யாழ்ப்பாணத்தில், கொத்து என்பது நாழிக்குப் பெயராய் வழங்குகின்றது. இவற்றையெல்லாம் ஒருங்கு நோக்கின், கொத்து என்பது கொய்து என்பதன் திரிபு என்பது துணியலாகும். போய்ச்சேர்தல் என்னும் பொருளில் மலையாளத்தில் வழங்குகின்ற 'எத்து' என்னுஞ் சொல் எய்து என்பதன் திரிபாகும். இதுவும் ஈண்டு ஒப்பிடற் குரியதே.

மைந்து : மைந்தன் என்பது இளையன் என்னும் பொருளிலும் வழங்குகின்றது.

[92] 'மகன்பிழை யன்று மைந்த, விதியின்பிழை'

என்பது காண்க. மைந்தினை யுடையவன் மைந்தன். ஆகலின், மைந்து என்பது இளமை என்னும் பொருளுடையதாதல் வேண்டும். மைந்து என்பதில் து - விகுதி நீங்கின் மைந் என்பது எஞ்சும். மை என்பதற்கு இளமை என்னும் பொருள் இல்லை. ஆகலின், இது(மை), இளமை என்னும் பொருளுடையதொரு சொல்லின் திரிபாயிருக்கும். அச் சொல் யாது என ஆழ்ந்து நோக்கின், மழ என்பதுவே என்று புலனாகும். மழ என்பது மழ் என்றாகித் து - விகுதியோடு சேரின்,

மழ் + து = மழ்ந்து = மய்ந்து (மைந்து)

என்றாகும். இண்டு ழகரம் யகரமாகத் திரிந்துளது. ழகரம் யகரமாய்த் திரிந்து வழங்குதலை அறிந்து முதன்முதலில் எழுதினவர் வீரசோழிய வுரைகாரர். இத்திரிபு நெடுங்காலத்தின் முன்னரே நேர்ந்துளது என்பது இச்சொல்லால் அறியவருகின்றது. மய்ந்து (மைந்து) என்பது இளையது என்னும் பொருளுடையதாயினும் அன் விகுதியோடு சேர்ந்தவிடத்து இளமை என்னும் பொருளில் நிற்கின்றது. இளையன் வலியனாயிருப்பானாகலின் மைந்து என்பது வலிமை என்னும் பொருளிற் பயில்வதாயிற்று.

92. கம்ப. நகர்நீங்கு. 133

பொங்து என்பது புழை என்பதன் முதனிலை-யாகிய புழ் என்பதனோடு து - சேர்ந்து அமைந்த சொல். இண்டு உகரம் ஒகரமாயுளது. உகர ஒகரங்கள் மாறுதல் பெருவழக்கு.

(6) இனி, பு-விகுதி உள்ள பெயர்ச்சொற்களை நோக்குவோம் :

முதலில், பெயர்ச்சொல்லோடு பு - விகுதி சேர்ந்-துள்ள சில சொற்களைக் காண்போம்.

உடம்பு என்பது உடல் என்னுஞ் சொல்லோடு பு - விகுதி சேர்ந்தது. என்பு என்பது எல் என்-னுஞ் சொல்லோடு பு - விகுதி சேர்ந்தது. எற்பு என்பதில் லகரமெய் றகரமாய்த் திரிந்துளது. எல் என்னுஞ் சொல்லே மலையாளம் கன்னடம் இம் மொழிகளில் வழங்குகின்றது. சணப்பு என்பது சணல் என்பதனோடு பு - சேர்ந்தது. பசப்பு என்பதும் இவ்வாறேயதே. பசலை என்பதில் ஐ விகுதி; பசப்பு (பசல் + பு) என்பதில் பு - விகுதி.

[93]நாட்பு என்பது நாழ் என்பதனோடு பு - சேர்ந்த சொல். இச்சொல், போர் என்னும் பொருளில் வழங்கியுளது. நாழ் என்பது போருக்குக் காரண-மான தன்மை ; செருக்கு.

[94]'நாழா லமர்முயன்ற வல்லரக்கன்'

93. பதிற். 45

94. பெரியதிருவந். 11.

என்பதில், நாழ் என்பது அமருக்குக் காரணமாய தன்மை—செருக்கு ஆதல் அறிக. ஞாட்பு என்பது நாட்பு என்பதன் திரிபு.

காம்பு என்பது பூ, இலை இவற்றின் தாளுக்கும் மூங்கிலுக்கும் பெயராய்ப் பயில்கின்றது.

[95]'காம்புவேய் மலர்த்தாள் பட்டே கடிமரக் கொம்பு-நாற்பேர்'

என்பது நிகண்டு. இனி, கால் என்பதுவும் பூவின் தாளுக்குப் பெயராய் வழங்கும். இது,

[96]'கால் இடம் மரக்கால் பிள்ளை குறுந்தறி வனங் காம் பூற்றம்'

என்னும் நிகண்டினுல் அறியலாகும். தாள் என்பதுவும் கால் என்பதுவும் ஒருபொருளில் வழங்குதலானும் பூவின் காம்பிற்குக் கால் என்று வழங்குதல் கூடுமன்றே? இவற்றை நோக்கும்பொழுது, காம்பு என்பது கால் என்னுஞ் சொல்லோடு பு-விகுதி சேர்ந்தமைந்த சொல், எனல் தெரியும். கால் என்பதனோடு னகரமெய் சேர்ந்திருத்தல் வேண்டும். முதனிலைகளோடு ன் - சேர்தல் உண்டென்பது அயினி (அயில் + ன் + இ), முதலிய சொற்களால் அறியப்படும். அம்முறையில், கால் + ன் + பு = கான்பு ஆகும். கான்பு - காம்பு என்று மருவியுளது. நோன்பு என்பது நோம்பு என்று வழங்கு-

95. சூடாமணிநிக. 11 : மகர. 4.
96. சூடாமணி நிக. 11 லகர. 19.

தல் ஈண்டு ஒப்பிடற்குரியது. காம்பு என்பதன் இடையில் னகரமெய் சேர்ந்திலது எனின், லகரம் னகரமாய்த் திரிந்தது எனல் வேண்டும். லகரம் புவ்விற்கு இனமாகிய மகரமாய்த் திரிந்தது எனல் பொருந்தாது, நோன்பு என்பதில் அவ்வாறு திரிந்திலாமையானும், நோல் என்னும் பகுதியில் தோன்றிய நோன்பு என்பதுவே நோம்பு என்று வழங்குதலானும்.

இனி, மூங்கிலைக் குறிக்குங் காம்பு என்னுஞ் சொல், காழ் என்பதனோடு பு-விகுதி சேர்ந்து அமைந்தது. குறில்முதன்மொழியாகிய கழை என்பது மூங்கிற்குப் பெயராய் வழங்குதல் ஈண்டு நினைக்கத்தக்கது.

[97] 'காழ்மண் டெஃகமொடு'

என்னும் அடியில், காழ் என்னுஞ் சொற்குக் காம்பு என்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் பொருள் எழுதியிருத்தலும் ஈண்டைக்குக் கருதத்தகும். இவற்றால், லகாரமேபோன்று ழகாரமும் திரியும் என்பது அறியப்படும்.

வேறுவேறு பொருளையுடையதொருசொல் வேறுவேறு முதனிலையின் அடியில் தோன்றி ஒரு வடியில் அமைந்திருப்பது வேறுசில சொற்களிலும் காணலாம். 'தொண்டு' என்னுஞ் சொல்லை நோக்குவோம்: இஃது, அடிமைப்பணி என்னும்

97. மதுரைக்காஞ்சி. 739.

பொருளில் தொழ் (தொழு) என்னும் முதனிலையினின்று அமைந்ததென்று மேலே அறிந்தோம். வேலிகளின் இடையேயுள்ள சிறிய வெளியிடத்தைக் குறிக்கும்பொழுது தொள் என்னும் முதனிலையில் அமைந்தது. தொள் + து = தொண்டு. தொண்டு - தொளை (துவாரம்) உடையது. விகுதி வேறுபாட்டால் பொருள் வேறுபடுமாகலின், தொளை, தொண்டு என்பன பொருள் வேறுபட்டன.

இக்கூறியவற்றால், காம்பு என்பது கால், காழ் இவ் விரண்டு முதனிலைகளினின்றும் அமைதல் கூடும் என்பது அறியலாகும்.

வம்பு என்பது நிலையின்மை என்னும் பொருளில் பண்டு வழங்கியது. இது,

[98] 'வம்பு நிலையின்மை'

என்னுந் தொல்காப்பியத்தான் அறியலாகும்.

நிலையின்மை என்னும் பொருளில், வழு என்பதன் முதனிலையாகிய வழ் என்பதனோடு பு - சேர்ந்த சொல்லாகலாம். வழுவுதல் என்பது பொருள். அதனால் நிலையின்மை என்னும் பொருள் வந்தது.

நுசுப்பு என்பது நொசி என்னும் பகுதியோடு பு - சேர்ந்தமைந்த நொசிப்பு என்பதன் திரிபாகும். நொசிதல் - நுண்ணிதாதல். இடையை நுண்ணிது என்று கூறுதல் கவிமரபு. நொசி, நொய் இவ்

98. தொல். உரி. 31.

விரண்டும் ஒரு சொல்லாயிருக்கலாம் எனத் தோன்றுகின்றது.

பொதும்பு என்பது பொதுள் என்பதனோடு பு-சேர்ந்த சொல். பொதுளுதல் - நெருங்குதல். பொதும்பர் என்பது செடி முதலியன நெருங்கியதற்குப் பெயராதல் இதனை வலியுறுத்தும்.

வீம்பு என்பது வீண்தன்மை என்னும் பொருளில் முதற்கண் வழங்கி, பின்னர், செருக்கு முதலிய பொருளில் வழங்கியதாகும். இதனை நோக்கும்போது, இது, வீண் என்னுஞ் சொல்லோடு பு—விகுதி சேர்ந்து அமைந்ததாகும் எனத் தோன்றுகின்றது. சண்பு—சம்பு என்று மருவியதுபோன்று வீண்பு—வீம்பு என்று மருவியுளது. இச்சொல் (வீம்பு) பழைய நூல்களில் வழங்கப்பட்டிலது.

தெம்பு என்பது உடல்வன்மை என்னும் பொருளில் வழங்குகின்றது. அச்சொல்லில் பு—விகுதி நீங்கின், தெம் என்பது எஞ்சி நிற்கும். அதற்குப் பொருளில்லை. தெம்பு என்பதன் பொருளை நோக்கின், அது, திண்பு என்பதன் மரூஉ என்பது புலனாகின்றது. திண்பு—தெண்பு என்றாதல் எளிது. இகர எகரங்கள் தம்முள் மாறுதல் பெருவழக்கன்றோ? தெண்பு என்பதில் ணகரம், விகுதியாய் வந்த பகரத்துக்கு இனமாகிய மகரமாய்த் திரிந்துளது.

உழவு என்பது உழபு என்பதன் திரிபு. பு - வு ஆகி மருவியுளது. வு - விகுதியுள்ள சொற்களி

லெல்லாம் இயல்பாய விகுதி பு-வ்வே. உலைவு கழிவு குலைவு சார்வு சேர்வு சோர்வு தணிவு தீர்வு நடுவு புகல்வு புரிவு மலைவு முதலியவற்றிலெல்லாம் பு-விகுதியே வு-விகுதியாய்த் திரிந்துளது. பண்டைச்செய்யுட்களில் படுப வருப சார்பு என்று வருபவை பிற்காலத்தில், படுவ வருவ சார்வு என்று வந்திருத்தல் அறியத்தக்கது.

இனி, அகரத்தோடு மெய்யெழுத்துச் சேர்ந்தமைந்த விகுதிகளை நோக்குவோம்:

1. அம் விகுதி—முதற்கண் அம் என்னும் விகுதியைக் காண்போம். பொருள்வேறுபாடின்றியே பெயர்ச்சொல்லோடு அம் விகுதி சேர்ந்துளது.

| | |
|---|---|
| குன்றம் | [99] 'குன்றமார் பரிந்து' |
| மன்றம் | [100] 'புன்றலை மன்றம் நோக்கி' |
| கோங்கம் | [101] 'கோங்கம் பைந்துகின் முடியணிந்து' |
| மார்பம் | [102] 'பொன்றுஞ்சு மார்பம்' |
| துன்பம் | [103] 'துன்பந் துடைத்தூன்றுந் தூண்' |

99. சீவக. 286.
100. குறுந். 64.
101. சீவக. 1558.
102. சிலப். 19-61.
103. குறள். 615.

நறவம் [104]'நறவங் கொப்புளித்தலின்'

நாரம் [105]'நாரங் கொண்டார் நாடு கவர்ந்தார்'

தொழுவம் [106]'பல்லான் தொழுவத்து'

நாழம் [107]'பலபல நாழுஞ் சொல்லிப் பழித்த'

நெற்றம் [108]'சினை விளைந்த நெற்றம்'

புற்றம் [109]'நெடுஞ்செம் புற்றம் ஈயல்'

பதவம் [110]'பெரும் பதவப் புல்'

சுறவம் [111]'பாய்ந்தது சுறவம்'

புறவம் [112]'கானுறை புறவ மெல்லாம்'

புன்கம் [113]'புன்கம் பொரியணிந்தன'

நுணவம் [114]'நாகுமுதிர் நுணவத்து'

முதலியன. இச் சொற்கள் அம் விகுதி சேரப்பெறுமலே பயின்று வழங்குவன.

104. சீவக. 74.
105. கம்ப. மாரீச.
106. குறுந். 190
107. பெரியாழ். 4. 3: 5
108. அகம். 151
109. ஐங்குறு. 497
110. கலித். 109
111. திருவிளை. வலைவீசிய. 37
112. சீவக. 1430
113. சீவக. 1649
114. சிறுபாண். 51

இனி, பகுதியோடு அம் சேர்ந்த சொற்களை நோக்குவோம்:

ஞாலம் அகலம்
ஆழம் நீளம்

முதலியன.

ஊட்டம், நீட்டம், நுணுக்கம், பெருக்கம் என்பவற்றில், பிறவினைப்பகுதியோடு அம் சேர்ந்துளது.

பகுதியோடு அம் விகுதி சேருமிடத்து, இடையே து - சேர்தல் உண்டு.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| + து + அம்: | கொற்றம் | — | கொல் | + | து | + | அம் |
| | முற்றம் | — | முன் | + | து | + | அம் |
| | தேற்றம் | — | தேறு | + | து | + | அம் |
| | கூட்டம் | — | கூடு | + | து | + | அம் |
| | நாற்றம் | — | நாறு | + | து | + | அம் |
| | நீத்தம் | — | நீர் | + | து | + | அம் |
| | குட்டம் | — | (குழி என்பதன் முதனிலை யாகிய) குழ் | + | து | + | அம் |

முதனிலைக்கும் அம் விகுதிக்கும் இடையே பு - சேர்தல் உண்டு.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| + பு + அம்: | துடைப்பம் | — | துடை | + | பு | + | அம் |
| | தட்பம் | — | தண் | + | பு | + | அம் |
| | சிறுப்பம் | — | சிறு | + | பு | + | அம் |
| | நெடுப்பம் | — | நெடு | + | பு | + | அம் |

முதலியன.

முதனிலைக்கும் அம் விகுதிக்கும் இடையே கு-சேர்தல் உண்டு.

+கு+அம்: நோக்கம் — நோழ் + கு + அம்

நோக்கம் என்பது நோக்கு+அம் எனப் பிரிக்கப்படும். ஆயின், நோக்கு என்பதில் கு-விகுதி யாவதாகலின், அதனுள் பகுதி ஒன்று இருத்தல் வேண்டும். நோக்கு என்னுஞ் சொல்லின் பொருளில், [65] கன்னடத்தில் நோடு என்பது வழங்குகின்றது. நோடு என்னும் பகுதி எதிர்காலவினையில் நோழ்பன்(o), நோழ்பள், நோழ்பர் என்று அமைவுறும். இச்சொல்லில் ப் - எதிர்கால விடைநிலை. வியங்கோளில் நோழ்கெ என வரும். இவ்வினையில் நோடு என்பது நோழ் என்று திரிந்துளது என்பது தோன்றும். இதனை ஆராயின், நோழ் என்பதுவே இயல்பான வடிவம் எனவும் ழகரம் டகரமாய்த் திரிந்து நோடு என்ருயிற்று எனவும், சிலவினைகளில் இயல்பாகிய வடிவத்தோடு நிலைத்துளது எனவும் புலனுகும். இவற்ருல், நோக்கு என்பதன் முதனிலை நோழ் எனல் பெறப்படும். நோட்டம் என்னுஞ் சொல்லும் இப் பகுதியினின்று அமைந்த தாகும். நோழ்+து+அம்—நோட்டம்.

இனி,

[116] பொக்கம்—பொய்

என்னுஞ் சொல் பொய் என்னுஞ் சொல்லோடு கு+அம் சேர்ந்து அமைந்ததாகும். பெயர்ச்சொல்-

116. திருஞான. கானூர் : 7

லோடும் பொருள்வேறுபாடு இன்றி, கு - முதலியன சேர்தல் உண்டன்றே? பொச்சம் என்னுஞ் சொல் பொய் என்பதனோடு து+அம் சேர்ந்து அமைந்தது; யகாரத்தின் சார்பினால் தகாரம் சகாரம் ஆயிற்று. பொய்த்துப் போயிற்று என்னுந் தொடர் பொச்சிப் போச்சி என்று வழக்கில் வழங்குதல் ஈண்டுக் கருதற்பாலது.

2. இனி, அர் விகுதி சேர்ந்த சொற்களை நோக்குவோம்: இவ் விகுதி, சில சொற்களோடு பொருள்வேறுபாடு இன்றியே சேர்ந்துவருகின்றது.

பாங்கர்: [116]'பல்லியும் பட்ட பாங்கர்'

பின்னர்: [117]'பின்னரும் பீடழிக்கும் நோயுள'

முன்னர்: [118]'எரிமுன்னர்'

இவை அர் விகுதி யில்லாமலே பயில்கின்றன.

வணர் என்பது வளை(தல்) என்னும் பொருளில் வழங்கப்பட்டுளது.

[119]'வணர்ந்தேந்து மருப்பின் 'வள்ளுயிர்ப் பேர்யாழ்'

என்பது காண்க. இதனை நோக்கின், இச்சொல்

116. சீவக. 1909
117. நாலடி. 92
118. குறள். 435
119. மலைபடு. 37

(வணர்), வள் என்னும் முதற்பகுதியோடு அர் சேர்ந்தமைந்தது என்பது உணரலாகும். வளர் என்பதும் இவ்வாறாயதே. வணர் என்பதில் நகர-மெய் சேர்ந்துளது; வளர் என்பதில் நகரமெய் சேரவில்லை. அதனால், பொருள் வேறுபட்டது. வளை, வள்ளம், வட்டம், வட்டில் இவையெல்லாம் வள் என்னும் மூலப்பகுதியினின்று அமைந்தன-வாகும். இவை விகுதிவேறுபாட்டால் பொருள்-வேறுபாடுஉடையனவா யுள.

3. இனி, அல்இறு சேர்ந்துள்ள சொற்களை நோக்குவோம் :

> தொடையல் : [120]'தொடையலங் கோதை'
> வறையல் : [121]'பால் வறையல்'

என்பன காண்க.

> [122]'நெய்துள்ளிய வறைமுகக்கவும்'

என்பதில் வறை என்பது அல்விகுதிஇன்றி வந்துளது. இச்சொற்கள் இவ் விகுதியோடு வழங்குதல் சிறு-பான்மை.

அல் விகுதி முதனிலையோடு சேர்ந்தும் வழங்கும். சூழல், சாரல், பெயல் முதலியன காண்க. இளவல் புதுவல் என்பனவும் இத்தகையன வாகும்.

120. சீவக. 464.
121. திருவிளை. குண்டோ : 14
122. புறநா. 386.

யாகின்றது. இனி, அன் விகுதிக்கும் முதனிலைக்கும் இடையே எழுத்துக்கள் தோன்றி நிற்றல் உண்டு. கேள்வன் கொலைவன் என்பவற்றில் வகரமெய்யும் கொலைநன் என்பதில் நகரமெய்யும் உள்ளன. கொலைஞன் என்பது கொலைநன் என்பதன் திரிபு. வலைஞன் அறிஞன் அரிஞர் என்பவற்றிலும் ஞகரம் நகரத்தின் திரிபே.

[124]சிறுக்கன் என்பதில் சிறு என்னும் முதனிலையோடு கு-சேர்ந்துளது. இது மலையாளத்தில் செறுக்கன் என்று வழங்கும்; செக்கன் என்று மருவி வழங்குதலும் உண்டு.

கொண்கன் என்பது கணவனுக்கு வழங்கும். இது கொள் என்னும் பகுதியோடு குவ்வும் அன்னும் சேர்ந்த சொல்; இடையே னகரஞ் சேர்ந்துளது; ளகரமெய் திரிந்தது எனினும் அமையும். இதன் பொருள் கொண்டவன் என்பது. கொண்டான் என்பது பண்டைச்செய்யுட்களிற் பயில்வதுவே.

முதனிலைக்கும் விகுதிக்கும் இடையே து-சேர்தல் உண்டு. ஒருத்தன் என்பது காண்க. ஒரு + து + அன் = ஒருத்தன்.

இவ்வாறே பு-சேர்தல் உண்டு. தொழும்பன் என்பது காண்க.

இனி, பாணன் என்பது பாடுவோன் என்னும் பொருளது. இதன் பெண்பாற்சொல் பாடினி என்று வழங்கப்பட்டுளது.

124. பெரியாழ்வார். 1. 4: 7

[125]'இழைபெற்ற பாடினிக்கு'

என்பது காண்க. இதனை (பாடினி) நோக்கின், ஆண்பாற்சொல் பாடுநன் என்றிருத்தல் வேண்டும் என்பது புலனாகும். பலர்பாற்சொல் பாடுநர் என்பது.

[126]'பாடுநரு மில்லை பாடுநருக் கொன்று'

[127]'பாடுநர்க்கு மாடுநர்க்கும்'

என்பன காண்க. பாடுநி என்பதுவே இகரத்தினால், அடுத்த உகரமும் இகரமாய்த் திரிந்து பாடினி என்று உளது. பாடுநன் என்பதில் உகரங்கெட, பாட்நன் என நின்று, அதுவே பாணன் என்று மருவியுளது. வாழ்நன் என்பது வாணன் என்று வழங்குதல் ஒப்பிடற்பாலது. பாணன் என்னுஞ் சொல்லை நோக்கிப் பாணி என்னும் பெண்பாற்சொல் பிற்காலத்தில் அமைக்கப்பட்டுளது.

[128]'என்கொணர்ந்தாய் என்றாள் பாணி'

என்பது காண்க. [வடமொழியில், பேசுபவன் என்னும் பொருளில் பாணக என்னுஞ் சொல் வழங்குகின்றது.]

5. இனி, இ-விகுதி சேர்ந்துள்ள சொற்களை நோக்குவோம்:

125. *புறம். 11*
126. *புறம். 325*
127. *யா. கா. மேற்கோள்*
128. *தனிப்பாடல்*

பிரிக்கலாம் எனத் தோன்றுகின்றது. இவ்வாறு பிரிக்கின், கண் உடையது என்பது பொருளாகும். நார்க்கட்டில் கண்கண்ணுய் இருப்பது காண்க. அகணிநாரால் கட்டில் அமைத்தல் பண்டைவழக்கு. அது,

[132] 'கட்டில் நிணக்கு மிழிசினன் கையது
போழ்தூண் டூசியின் விரைந்தன்று மாதோ'

என்பதனல் அறியலாகும்.

விகுதிக்குமேல் கு - சேர்தல் உண்டு. மூங்கில் என்பது முளுங்கில் என்பதன் திரிபு. இது, முளை என்பதன் முதனிலை யாகும் முள் என்பதனேடு கு+ இல் சேர்ந்தமைந்த தாகும் எனத் தோன்றுகின்றது. முளை=மூங்கில். மூங்கில் என்பதில் முளை என்பதன் முதனிலை நீண்டுளது.

அடிசில் என்பது அடு என்னும் பகுதியோடு கு+ இல் சேர்ந்தமைந்த அடுகில் என்பதன் திரிபு. ககர-மெய்யில் ஊர்ந்துள்ள இகாரத்தால் ககரம் சகரமாய்த் திரிந்து அடுசில் என்ருகி, 'சி' எழுத்தின் சார்பினல் டு, டி ஆகியுளது. தெலுங்கில் விடுசு என்னும் பகுதிக்கு இறந்தகாலவினையில் இகரம்வர விடிசி என்ருதல் இண்டு அறிக. விடுசு+இ=விடுசி என்-றிருக்கவேண்டுவது. அது 'சி'யின் சார்பினல் டு, டி ஆகப்பெற்று விடிசி என்ருகியுளது. இவ்வாறு அயல்நின்ற இகரத்தால் உகரம் இகரமாய்த்திரிதல் தெலுங்கில் நியதியா யுளது. குரிசில் என்பதில்

132. புறம். 82

உள்ள ரி குருசில் என்பதில் உள்ள ருவ்வின் திரி-பாதல் அறிக.

7. இனி, ஐகாரவீற்றுப் பெயர்ச்சொற்களை நோக்குவோம் :

சிலசொற்களோடு பொருள்வேறுபாடு இன்றியே ஐகாரஞ் சேர்ந்துளது.

[133]சிதல் — [134]சிதலை
[135]நுணல் — [136]நுணலை
[137]பீர் — [138]பீரை

என்பன காண்க. பொருள் வேறுபட்ட சொற்களும் உள.

சுடல் — சுடலை
தொடல் — தொடலை
திரள் — திரளை

முதலியன காண்க. இனி, பகுதியோடு ஐ - விகுதி-மட்டுஞ் சேர்ந்து பெயர்ச்சொல்லாதல் உண்டு. எடை, தடை, தொடை, கவலை, கொலை, கொள்ளை முதலியன பல. நிற்க.

முதனிலைக்கும் ஐ விகுதிக்கும் இடையே உ சேர்தல் உண்டு.

நிலுவை — நில்+உ+வ்+ஐ

133. நன்னூல் 447
134. நாலடி. 197
135. பழமொழி. 184
136. பிங்கல. 8 : 335
137. தொல். எழுத். 363
138. புறம். 116

பெயர்கட்கும் அதனோடு சேரும் ஐ விகுதிக்கும் இடையே து - சேரும்.

மடந்தை — மடம் + து + ஐ (இதில் து - உடைமைப்பொருளது)

வலத்தை இடத்தை முடந்தை இளந்தை முத-லியன காண்க.

இருந்தை என்பது, இருமை என்பதன் ஐ கெட, து - சேர்ந்த தாகும். இருமை - கருமை; இருந்தை - கருமையுடையது; கரி.

[139]'பாலாற் கழீஇப் பலநா ளுணக்கினும்
வாலிதாம் பக்கம் இருந்தைக் கிருந்தன்று'

என்பது காண்க.

பெட்டை என்பது பெண் என்னுஞ் சொல்லோடு து - வ்வும் ஐயும் சேர்ந்தது. து-வ்வின் வல்லோசை-யினால் ணகரம் டகரமாய்த் திரிந்துளது. தெலுங்கில் பெண்ட்டெ என்று வழங்குதல் அறிதற்பாலது. பேடை என்பது பெட்டை என்பதன் நெடியவடிவம். பெடை என்னுஞ் சொல்லும் உளது.

மட்டை என்பது மழித்தது என்னும் பொரு-ளுடையது. 'மழித்தலை' என்பதற்கு [140]'மட்டையாகிய தலையுடனே' என்னும் புறநானூற்றுரை காண்க. இக்காலத்தில் இச்சொல் மொட்டை என்று வழங்கு-கின்றது. மகன் என்பது சிலர்பேச்சில் மொவன்

139. நாலடி. 258
140. புறநா. 261

என்று வழங்குதல் அறிதற்பாலது. மட்டை என்னுஞ் சொல் மழி என்பதன் முதனிலையாகிய மழ் என்பதனோடு து-வ்வும் ஐயுஞ் சேர்ந்தது.

மண்டை என்பது மண்கலத்தைக் குறிக்குமிடத்து, மண் என்னுஞ் சொல்லோடு து-வ்வும் ஐயும் சேர்ந்தமைந்தது.

மெத்தை என்பது மென்மை என்பதன் முதனிலையாகிய மெல் என்பதினின் றமைந்ததாகும்.

மொந்தை என்பது மொள் என்னும் பகுதியோடு து-சேர்ந்தமைந்தது. மொள்ளுவது என்பது பொருளாகும். தெலுங்கில் இது முன்த்த என்று வழங்குகின்றது.

போந்தை என்பது வழக்கிறந்த பூந்தை என்பதன் மரூஉ ஆகும். பூழ்+து+ஐ=பூந்தை; புழையுடையது என்பது பொருள். பனை புரை உடையதாகலின் பூந்தை—போந்தை எனப்படலாம். இவ்வாறாயின், தென்னைகமுகுகளுக்கும் இப்பெயர் உரியதாகும்; அவற்றிற்கு வழங்கிற்றிலது. ஆகலின் இது காரணவிடுகுறியாகும்.

அண்டை என்பது அண் (அண்மை) என்னும் முதனிலையினின் றமைந்தது. பின்றை என்பது பின் என்பதினின் றமைந்த தென்பது வெளிப்படை.

இனி, முதனிலைக்கும் ஐ விகுதிக்கும் இடையே கு-சேர்ந்த சொல்லை நோக்குவோம்.

செல்கை, செய்கை, சேக்கை, சேர்கை, பருக்கை முதலிய எல்லாவற்றிலும் கு-வ்வும் ஐ விகுதியுஞ்

சேர்ந்துள்ளன. செயற்கை, மயற்கை (மசக்கை) என்பன செயல், மயல் என்னும் பெயர்ச்சொல்லோடு கு, ஐ - சேர்ந்தன.

[141]பூட்கை என்பது மேற்கோள் என்னும் பொருளில், பூண் என்னும் பகுதியோடு கு, ஐ சேர்ந்தமைந்தது.

காங்கை என்பது காய் என்னும் முதனிலையினின் றமைந்தது என்று ஆசிரியர் கால்ட்வெல் எழுதியுள்ளார். காய்+கு+ஐ=காய்ங்கை - காங்கை.

புற்கை என்னுஞ் சொல்லும் புல் என்பதினின் றமைந்ததாகும். புல்+கு+ஐ=புற்கை.

மங்கை என்னுஞ் சொல் பதினொரு வயசுமுதல் பதின்மூன்று வயசுவரையுள்ள பருவத்தினளாகிய இளமகட்குப் பெயராக அமைந்தது. ஆயின், இதுவும், இதுபோன்ற பேதை மடந்தை அரிவை தெரிவை என்னும் பருவப்பெயர்களும் மகளிர்க்குப் பொதுவாகவும் வழங்கிவருகின்றன. மங்கை என்னுஞ் சொல்லின் பொருளை நோக்கின் அது பருவங்குறித்து வந்த பெயரே என்பது வலியுறும்.

மங்கை என்னுஞ் சொல்லில், ஐ, விகுதியும் கு - சாரியையும் நீங்கின், மங் - என்பது எஞ்சிநிற்கும். இது பொருளுடையதாயில்லையாகலின் இயல்பான சொல் ஆகாது; மரூஉ ஆகும். இயல்பாய சொல் யாதாகும் என்பதை ஆராய்தல் வேண்டும். மணம்

141. புறம். 69

என்பதன் முதனிலையாகிய மண் என்பதனோடு கு, ஐ சேர்ந்தமைந்து மண்கை என்று வழங்கியதுவே மங்கை என்று திரிந்துளது எனத் தோன்றுகின்றது. களவொழுக்கம் நிகழ்வது பன்னிரண்டாம் யாண்டு நிறையும் பருவத்தில் என்று [142]இறையனாரகப்பொருளுரை கூறுகின்றது. வதுவைமணம் புரிவதும் அப் பருவத்திலேயே என்பது சிலப்பதிகாரத்தினால் தெரிகின்றது. [143]'ஈராறாண்டகவையாள்' என்று மணமகளாகிய கண்ணகியைக் கூறியிருப்பது காண்க. 'அகவையாள்' என்பது உட்பட்டவள் என்னும் பொருளது. அஃதாவது பன்னீராண்டுக்குட்பட்டவள் என்பதாம். தலைவி பதினோராண்டும் பத்துத்திங்களும் புக்கவள் என்று களவியலுரை கூறுதல் ஈண்டு நினைக்கற்பாலது. சிலப்பதிகாரத்தினால் மணமகட்குப் பன்னீராண்டு நிறைவதன்முன் மணம் நடப்பது அறியப்பட்டது. பெண்கட்குப் பதினோராண்டிற்குமேல் பதின்மூன்றாம்யாண்டுமுடிய மணஞ்செய்யும் பருவமாகப் பண்டையோர் கொண்டனர் என்பது மங்கை என்னும் பருவப்பெயரால் அறியலாகும்.

142. களவியல் 32-உரை.

143. சிலப். I

# பிற்சேர்ப்பு

## மரூஉச்சொல்

### பொம்மை

பொம்மை என்று இக்காலத்தில் வழங்குவது பொய்மை என்பதன் மரூஉ.

ஐங்குறுநூற்று 246-ஆஞ் செய்யுளின் உரையில் 'பொய்மை வகையால்' என்னுந் தொடர் வந்துளது. ஆண்டு, பொய்மை என்பது பொய்வடிவம் என்னும் பொருளது. இதில் 'மை' என்பது மெய் என்பதன் திரிபு. தன்மை என்பது போன்ற சொற்களில் உள்ள 'மை' என்பது 'மெய்' என்னுஞ் சொல் என்று டாக்டர் கால்ட்வெல் எழுதியிருப்பது அறியத் தக்கது. இவ்வாறே இம்மை, மறுமை என்பவற்றிலும் மை என்பது மெய் என்பதன் திரிபே. இம்மை = இம்மெய்—இவ்வடிவம், இவ்வுடம்பு. மறுமை = மறுமெய்—மறுவடிவம், மறுவுடம்பு (மறு பிறப்பு).

[1]"இம்மை மாறி மறுமை யாயினும்"

என்பதில், இம்மை மறுமை என்பன இப்பொருள வாதல் அறிக. தெலுங்கு மொழியில் மெய் (மெயி), மை என்னும் இரண்டு சொற்களும் உள. இதனை எனது [2]'கபிலர்' என்னும் நூலிற் காண்க. எண்ணெய்,

---

1. குறுந். 49.
2. கபிலர். பக். 121.

வெண்ணெய் என்பவை எண்ணை, வெண்ணை என்று மருவி வழங்குதல் இன்றைக்கு ஒப்பிடற்பாலது.

## கொப்பூழ்

கொப்பூழ் என்பது நாபிக்கு வழங்குகின்றது. இது கொய்பூழ் என்னுஞ் சொல்லின் திரிபு எனத் தோன்றுகின்றது; கொய்த புழை உடையது என்னும் பொருளதாகும்.

## இரும்பு

இரும்பு என்பது இரும்பொன் என்னுஞ் சொல்லின் மரூஉ ஆகும். இதில் இரு (மை) என்பது கருமை என்னும் பொருளது.

'இருமை பெருமையும் கருமையும் செய்யும்' என்னும் நிகண்டு காண்க. இதனால், இரும்பு (இரும்பொன்) என்பது கருமையான பொன் என்னும் பொருளதாகும். செம்பு என்பது செம்பொன் என்பதன் மரூஉ; செந்நிறமான பொன் என்னும் பொருளது. பொன் என்பது பொதுப்பெயர். பசும்பொன்-தங்கம்; வெண்பொன்-வெள்ளி; செம்பு (செம்பொன்)-தாமிரம்; இரும்பு (இரும்பொன்)-அயம். இச்சொற்களால் பொன் பொதுப்பெயராதல் தெளிவாகும். இரும்பு என்பது பழங்கன்னடத்தில் 'கர்பொன்' என்று வழங்குதல் ஈண்டு அறிதற்பாலது. இரும்பொன், செம்பொன் என்பவை ன், கெட, ஒகரம் ஈற்றில் ஒலித்தல் அரிதாகலின் அஃது உகரமாய்த் திரியப்பெற்று, இரும்பு, செம்பு என்று வழங்குகின்றன.

### சும்மாடு, சாக்காடு

சும்மாடு என்பது சும்மை அடு என்னுஞ் சொற்களால் ஆகியது; சும்மையை அடுத்திருப்பது என்னும் பொருளது. சும்மை - சுமை. சும்மை என்பதன் ஐகாரம் அகரமா யொலிக்க அதனோடு அடு என்பது சேர்ந்து, சும்ம + அடு = சும்மாடு என்றாகியுளது. சாகாடு (சாக்காடு) என்பதும் இது போன்றதே. சாகை + அடு = சாகாடு (சாக்காடு); சாதலை அடுத்த நிலை; சாதற்கு முன் உள்ள நிலைமை.

"மறத்தல் மயக்கம் சாக்கா டென்றிச்
சிறப்புடை மரபினவை களவென மொழிப"

என்னும் அடியில், சாக்காடு என்பது சாதற்கு முன்னுள்ள நிலையே யாதல் அறிதற்பாலது.

### ஈசல்

ஈசல் என்பது செய்யுட்களில் ஈயல் என்று பயில்கின்றது. இச் சொல் சிறகு முளைத்துப் பறக்குஞ் செல்லுக்கு வழங்குகின்றது. இப்பொருளை நோக்கும்பொழுது இஃது ஈசெல் என்னுஞ் சொல்லின் மரூஉவா யிருக்கலாம் எனத் தோன்றுகின்றது; ஈயாகிய செல் என்பது பொருளாகும்.

### குடுவை, இடுவை

குடுவை என்னுஞ் சொல் வாய் குறுகிய மண்கலயத்துக்கும் ஒருவகை ஓலைப்பெட்டிக்கும் வழங்குகின்றது. இது குறுவாய் என்னுஞ் சொல்லின்

மரூஉ. இவ்வாறே இடுவை என்பதும் இறுவாய் என்னுஞ் சொல்லின் மரூஉ. இடுவை என்பது, சென்னப்பட்டணம் முதலியவற்றில் வழங்குஞ் சந்து என்னும் பொருளில் வழங்குகின்றது; இறுதி யாகும் இடத்தது என்பது பொருளாகும். இச் சொற்களில் றகரம் டகரமாய்த் திரிந்துளது. கறி என்பது கடி என்று வழங்குதல் ஒப்பிடத்தகும். கற்கறிந்து—கல்லைக் கடிந்து—என்பதை அறிக. றகரம் டகரமானது போன்று, ற்ற—ட்ட ஆகி வழங்கும். ஒற்றுக் கேட்டல்=ஒட்டுக் கேட்டல் என்று வழங்குதல் போல்வன பல உள.

## கும்மி யடித்தல்

கும்மி யடித்தல் என்பது பெண்கள் கூடி வட்டமாய் நின்று கைகொட்டி யாடும் ஒரு விளையாட்டுக்கு வழங்குகின்றது. இதில் கும்மி என்பது குமமி என்னுஞ் சொல்லின் மரூஉ. குமமி=கும்மி=கும்மி. குமமியடிக்கும்போது பாடும் பாட்டில் 'கூடிக் கும்மி அடியுங்கடி' என்று வருதலை நோக்குக.

## சற்று

சற்று என்னுஞ் சொல் சிறிது என்னும் பொருளில் பிற்காலத்துச் செய்யுட்களில் வந்துளது; ஆயின், சாதாரண வழக்கில் 'சித்தே பொறு', 'சேத்தே பொறு' என்று வழங்குகின்றது. சற்று என்னுஞ் சொல்லின் முதனிலை அறியப்படுமாறில்லை. இதன் பொருளையுஞ் சித்தெ என்னுஞ் சொல்லையும் நோக்கின் சிறிதே என்பதுவே இயல்பான சொல் என்று

அறியலாகும். சிறிதே என்பது சிற்றே என்று ஒலித்து, பின் சற்றே என்று திரிந்துளதாகும். சிறிது அடி=சிற்றடி என் றாகியிருத்தல் அறிதற் பாலது.

## எச்சரிக்கை

எச்சரிக்கை என்னுஞ் சொல் விஷ்ணு ஆலயங்-களில் சுவாமி எழுந்தருளும்போது வழங்கப்படு-கின்றது; ஜாக்ரதை என்னும் பொருளில் வழக்கில் பயில்கின்றது. இச் சொல்லில் எச்சரி என்பதைப் பகுதியாகக் கொள்ளின் அதற்குப் பொருள் இல்லை. ஆகலின், இது மரூஉமொழியே யாகும். இதன் இயல்பான வடிவத்தை ஆராய்வோம்:

பழங்கன்னடத்தில் எழ்சறு என்னும் பகுதி உளது. இது எழ்தரு என்பதன் திரிபாகும். இதனோடு 'கெ' விகுதி சேரின் எழ்சர்கெ என்றாகும். இது புதுக் கன்னடத்தில் எச்சரிகெ என்று திரிந்துளது. தமிழில் எழுதரு என்னும் பகுதி 'கை' விகுதியோடு சேர்ந்து எழுதருகை என்றாகும். இது எச்சரிக்கை என்று திரிதல் கூடும். அல்லது கன்னடத்தினின்று வந்திருத்தலும் கூடும். எவ்வாறா-யினும் பொருள் ஒன்றே. கோயில்களில் வழங்கும் எச்சரிக்கை என்னுஞ் சொற்குப் பொருள் இதுவே. ஸ்ரீ வைஷ்ணவர் திருமாளிகையில் விசேடநாட்களில் ததீயாராதனை நடக்குங்கால் அனைவரும் அமுது செய்தபின் ஒருவர் 'எச்சரிக்கை' என்று சொல்வர். அதன் பின்னரே அனைவரும் எழுந்திருப்பர். இவ்

வழக்கினும் இச் சொற்கு எழுதருக என்பதே பொருளாதல் வலியுறும்.

எழுதருதல் என்பதற்கு விழித்தல் என்பதும் பொருளாதலின், கவனமாயிருத்தற்பொருளில் எச்சரிக்கை (எழுதருகை) என்பது வழங்கலாயிற்று. ஜாக்ரதை என்பதற்கும் விழிப்பாயிருத்தலே பொருளாதல் அறிக.

குள்ளன்

குள்ளன் என்பது வடிவிற் குறியவனுக்குப் பெயராய் வழங்குகின்றது. இதனை நோக்குமிடத்து, குறளன் என்பது இவ்வாறு மருவியுளது எனத் தோன்றுகின்றது. குறளன் என்பதில் றகரம் ஊர்ந்த அகரம் நன் கொலிக்காமற் கெட, குற்ளன் என்றாகி, அதுவே குள்ளன் என்றாகி யுளது. [1]தெலுங்கில் இவ்வாறாதல் உண்டு.

தெலுங்கில் ஏறு (யாறு) என்னும் ஒருமைச் சொல்லோடு பன்மை விகுதியாகிய 'லு' என்பது சேர, ஏறுலு என்றாகும். ஏறு என்பதன் உகரம் கெட, ஏர்ளு என்றும் ஏள்ளு என்றும் வழங்குகின்றது. இவ்வாறே ஊருலு என்பதும் ஊர்ளு, ஊள்ளு என்று வழங்கும். இது,

"ரோ ல:"

என்னுஞ் சூத்திரத்தானும், அதனுரையில்,

ஏறு—ஏள்ளு
கோரு—கோள்ளு [உகிர்கள்]

1. ஆந்த்ரசப்த சிந்தாமணி. 74.

என்று காட்டியிருக்கும் உதாரணத்தானும் அறியலாகும். இனி, தெலுங்கில் மறலி என்பது மல்லி (மள்ளி) என்று வழங்குதலை நோக்கின், குறளன் என்பது குள்ளன் என்று வழங்குதல் கூடும் என்பது அறியப்படும். இவ்வாறே, சொற்களில் இடைநின்ற உயிர் நன் கொலிக்காமற் கெட்டவழி நின்ற மெய், தனக்கு முன்னிற்கும் மெல்லெழுத்தாய்த் திரிதலும் உண்டு.

மதனி என்னுஞ் சொல் பார்ப்பனர்வழக்கில் மன்னி என்று வழங்குகின்றது. அதனை நோக்கின், அச்சொல்லில் தகாரமூர்ந்து நின்ற அகரம் கெட மத்னி என்றாகி, அதுவே மன்னி என்று திரிந்துளது என்பது நன்கறியலாகும். வடமொழியில் பத்நி என்று வழங்குஞ் சொல், தமிழில் 'பன்னி' என்று வழங்குதல் ஈண்டு ஒப்பிடற்பாலது.

## ஆப்பு

பனை முதலியவற்றைப் பிளத்தற்கு, அவற்றில் இடையிடையே முதற்கண் ஆழ இடுகின்ற கூராய முனையையுடைய சிறுகட்டையை ஆப்பு என்று வழங்குகின்றனர். ஆழ இடுதலின் அஃது ஆழ்பு எனப் பெயர் பெற்றது. ஆழ்பு என்பதுவே ஆப்பு என்று வழங்குகின்றது என்பது எளிதின் அறியப்படும்.

## முற்றும்

முற்றும் என்பது ஸம்பூர்ணம் என்பதுபோல் நூல்களில்" இறுதியில் எழுதப்படும். 'செய்தற்கலி

முற்றும்' என்று கலித்தொகையில் எழுதியிருப்பது காண்க. இதன் பொருளை நோக்குமிடத்து, இது, முழுதும் என்னுஞ் சொல்லின் திரிபாகும் எனத் தோன்றுகின்றது. முழுதும்—முழ்தும்=முற்றும். பழங்கன்னடத்தில், கழ்தெ. பொழ்து என்று குறிலை யடுத்து ழகரம் மெய்யாயிருத்தலின், அவ்வாறே பண்டைத்தமிழிலும் குறில்வழி ழகரமெய்யினை யுடைய சொற்கள் வழங்கினவாகலாம்; அன்றேல், முழுதும் என்பதில் ழகரத்தை ஊர்ந்துநின்ற உகரம் கெட்டது எனல் வேண்டும். இஃது எவ்வாறாயினும், முழ்தும் என்பதுவே முற்றும் என்று திரிந்துளது என்பது தவறாகாது.